# எம். பி. க்களுக்கு 'லேக்ஹவுஸ்' பணம் கொடுத்ததா?

Reg stered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 176
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆடி 21 ஜமா. ஆகிர் 3 வியாழக்கிழமை [6-8-70]

## ரேயல் கமிஷன் விசாரிக்கும்

கோட்டை, புதன்

மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்துக்கோ அன்றி வேறு ஏதாவது பிரேரணைகளுக்கோ வாக்களிககாது இருக்குமாறு எம். பிக்கள் யாருக்காவது 'லேக்கவுஸ்' ஸ்தாபனம் பணம் கொடுத்திருக்கிறதா?

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு ரி. எஸ். பெர்ணண்டோ தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ரேயல் கமிஷன் இதனை விசாரணை செய்யும் இதற்கான முழு அதிகாரத்தையும் கவர்னர் ஜெனரல் இக் கமிஷனுக்கு வழங்கியுள்ளார்.

லேக்கவுஸ் ஸ்தாபனத்தின் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட ரேயல் கமிஷன் லேக்கவுஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிபர்களோ ஊழியர்களோ நாணய நாணயமாற்றுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியுள்ளனரா. வெளி நாட்டு நாணயமாற்று விடயங்களில் நேர்மையற்ற முறையில் நடந்துள்ளனரா என்பதுபற்றி ஆராயும் அதே வேளையில் எம். பிக்கள் யாருக்காவது பணம்கொடுத்து தமது காரியத்தை சாதித்திருக்கிறார்களோ என்பதுபற்றியும் ஆராயும்.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்தை எதிர்க்க வேண்டுமெனக்கோரி எம். பிக்கள் யாருக்காவது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? என்பது குறித்து கமிஷன் முக்கியமாக ஆராயும்

இந்தக் கமிஷனில் நீதியரசர் ம. ஜெ. விமலரத்தின வழக்கறிஞர் வால்டர் விமலச்சந்திரா ஆகியவர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இவ்வருடம் டிசம்பர் 31ம் திகதி ரேயல் கமிஷன் தனது அறிக்கையை கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பிக்கும்,

# இராணுவத் தாக்குதல் இனி இராது: அதிகாரிகள் வாக்குறுதி

## கட்டுமரத்துடன் கடற்படை படகு மோதி ஒருவர் பலி

யாழ்ப்பாணம், புதன்

தொண்டமானாற்றுக் கடலில் கட்டுமரம் ஒன்றும், கடற்படை இயந்திரப் படகொன்றும் மோதிக் கொண்டமையால் வயோதிப மீனவர் ஒருவர் பலியானார். கந்தசாமி என்னும் 55 வயதானவரே கடலுக்குப் பலியானவராவார்

கரையிலிருந்து சுமார் 500 யார் தொலைவில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. கடலில் மீன் பிடிக்க மீனவ வயோதிபரும் அவரது பேரனும் சென்றுகொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றது

இயந்திரப்படகும் கட்டுமரமும் மோதிக்கொண்டதன் காரணமாக கட்டுமரம் கடலில் ஆழ்ந்தது கடற்படையினர் நீந்திச்சென்று மீனவர்களை காப்பாற்ற முயற்சித்தனர். பேரனை மட்டும் அவர்கள் மீட்கக்கூடியதாக விருந்தது, வயோதிபர் மரணமானார். அவரது சடலம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணை நடைபெற்றது.

## மீண்டும் பட்டமளிப்புவிழா!

### பல்கலைக்கழகங்களில்

கோட்டை புதன் வதற்கு செய்த ஏற்பாடு

## மயிலிட்டி சம்பவங்களின் பின் நடந்த சமரச மகாநாடு

—மயிலை. சிவ. சண்முகதாசன்—

யாழ்ப்பாணம், வியா

மயிலிட்டியில் இராணுவச் சிப்பாய்களுக்கும், கடற்றொழிலாளர் சிலருக்குமிடையில் நேற்றுக் காலையிலும் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதனால் ஐந்துபேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சென்ற மூன்று தினங்களாக மயிலிட்டிப்பகுதியில் இராணுவச் சிப்பாய்களுக்கும் பொதுமக்கள் சிலருக்குமிடையில் நடைபெற்ற கைகலப்புச் சம்பவங்கள் காரணமாக மயிலிட்டிப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் தங்கள் தொழிலுக்குச் செல்ல அஞ்சுவதாக மகாநாடொன்று நடைபெற்றது.

மகாநாட்டுக்கு முன்னதாக நடந்த பொலிஸ்விசாரணையில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு ச. முத்துலிங்கமும் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. ஜோக்கிம், தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு ...க்கப், சட்ட விரோ... குடியேற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கேணல் அபயசேகரா லெப்டினன் சப்புகல, மேஜர் செனிவிரத்தின, காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு ஜெயபாலசிங்கம்

...லாமென்றும் மயிலிட்டிப் பகுதி மக்களும் அச்சமடையத்தேவையில்லையென்றும் இராணுவச் சிப்பாய்கள் அவர்களுக்கு எவ்வித இடையூறும் செய்யமாட்டார்களென்றும் இராணுவ அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இராணுவத்தினர் தமது கடமையைச் செய்வதற்கும் பொதுமக்களும் இடையூறு செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் இராணுவ அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

இராணுவ சிப்பாய்கள் தவறாக நடந்துகொண்டால் ... உடனடியாகப் ... தகவல் கொடுக்கும்படியும் தவ...

## அசம்பாவிதங்கள்

மாவிட்டபுரம், புதன்

மாவிட்டபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஆங்காங்கே சிறுசிறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. புதன்கிழமை காலை சுன்னகச் சந்தைக்குச் சென்று இரண்டு மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கார்கள் கற்களால் தாக்கப்பட்டதாம் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு முன்பாக ஒருவர் தாக்கப்பட்டும் கீரிமலைககு பிரயாணிகளுடன் சென்றவான் ஒன்று குண்டு வீசப்பட்டு தாக்கப்பட்டும், காங்கேசன்துறையில் ஒருவரை தாக்கிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளனவாம்.

காங்கேசன்துறை பொலிசில் செய்யப்பட்ட இந்த புகார்களைத் தொடர்ந்து பொலிசார் மிகவும் எச்சரிக்கை யுடன்பலத்த கண்காணிப்புநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

— —

## தொழிற் சங்க திருத்த சட்ட மூலம நிறைவேறியது!

கோட்டை, புதன்

தொழிற்சங்க திருத்த சட்டமூலம் இன்று மக்கள் பிரதிநிதிகள்சபையில் நிறைவேறியது.

அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கங்களுக்குச் சமமாக தனியார்துறைதொழிற்சங்கங்கள் கொண்டுவரப்படுமென திருத்தத சட்டமூலம் கூறுகிறது,

பொதுநிர்வாக அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொழிற்சங்க திருத்தச் சட்ட மூலம் குறித்து சபையில் பேசினர்,

வெவ்வேறு அரசியல் கட்சிகளைச்சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரே நோக்கத்துடன் செயல்படவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வற்புறுத்தினர்.

### முல்லைத்தீவு

## பஸ் கண்டக்டர் கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் துரைராசா என்பவர் குமுளமுனையில் வைத்துக் கொலைசெய்யப்பட்டாரென முல்லைத்தீவுப்பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு... காரியான டாக்டர் கே இராசலிங்கத்தை 3 மணித்தியாலமாகக் குறுக்குவிசாரணை செய்தார் அதன்பின் மீகுதி விசாரணையை திரு பொன்னம்பலத்தின்வேண்டுகோளின்படி இம்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பட்டமளிப்புவிழா!
## பல்கலைக்கழகங்களில்

கோட்டை புதன்

இதுவரை காலமும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சான்றிதழ்கள் தபாலில் அனுப்பப்பட்டு வந்ததை ரத்து செய்துவிட்டு பட்டமளிப்பு விழாக்கள் மூலமே சான்றிதழ்களை வழங்கும் முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு கல்வி அமைச்சர் அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் முடிவு செய்திருக்கிறார்.

முன்னைய அரசாங்கம் சான்றிதழ்களைப் பட்டமளிப்பு விழாக்களின்போது வழங்கும் முறையை ரத்து செய்துவிட்டு அவைகளைத் தபால் மூலம் அனுப்புவதற்கு செய்த ஏற்பாடு குறித்து மாணவர்கள் பெரிதும் எதிர்ப்பு தெரிவிப்பதின் காரணமாகவே கல்வி அமைச்சர் இந்த முடிவை செய்திருப்பதாகத் தெரிகின்றது பட்டமளிப்பு விழாக்களை வருடம் தோறும் மீண்டும் நடத்தும்படி பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கு அறிவுறுத்தும் கடிதங்களைக் கல்வி அமைச்சர் விரைவில் அனுப்பி வைப்பார் என்று தெரிகின்றது.

1965-ம் ஆண்டு முதல் 1968 வரைக்கும் சான்றிதழ்கள் தபாலிலேயே அனுப்பி வைக்கப்பட்டு வந்தன

றும் பொதுமக்கள் சிலருக்குமிடையில் நடைபெற்ற கைகலப்புச் சம்பவங்கள் காரணமாக மயிலிட்டிப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் தங்கள் தொழிலுக்குச் செல்ல அஞ்சுவதாகவும் மயிலிட்டிப்பகுதி மக்கள் வெளியே நடமாட அஞ்சுவதாகவும் இதற்கு வழிகாண வேண்டியது அவசியமென்றும் காங்கேசன்துறைப்பட்டினசபைத் தலைவர் திரு க ஜெயபாலசிங்கம் பிரதமர், பொலிஸ் அதிபர், அரசாங்க அதிபர் வடபகுதிப்பொலிஸ் அதிபேர் ஆகியோருக்குத்தந்தி மூலம் அறிவித்திருந்தார்.

### மகாநாட்டில் வாக்குறுதி

மயிலிட்டியில் நடந்த பொதுமக்கள் மோதல் சம்பந்தமாக நேற்றுக்காலை காங்கேசன்துறையில் சமரச

விரோத குடியேற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கேணல் அபயசேகரா லெப்டினன் சப்புகல, மேஜர் செனிவிரத்தின, காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஜெயபாலசிங்கம் திரு ச. சிவஅடியார் ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

மயிலிட்டியிலுள்ள கடற்றொழிலாளர் தங்கள் தொழிலுக்கு அச்சமின்றிச்செல்ல

ருக்கொண்டனர்.

இராணுவ சிப்பாய்கள் தவருக நடந்துகொண்டால் அதுபற்றி உடனடியாகப் பொலிசாருக்குத் தகவல் கொடுக்கும்படியும் தவறு நடந்துகொள்ளும் சிப்பாய்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இராணு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 'அரசியல் நிர்ணய சபையில் செனட்டர்களுககு ஏன் இடமில்லை?''

கொழும்பு, புதன்

அரசியல் நிர்ணயசபையில் நியமன எம்பிக்கள் அங்கம் வகிக்கும்போது செனட்டர்களுக்கு இடமளிக்கப்படாததேன்? திருச்செல்வம், நடேசன் ஆகியோர் மிக்க அரசியல் ஞானமும், அறிவாற்றலுமுள்ளவர்கள். அவர்கள் போன்றவர்களுக்கு இடமளிக்கப்படாதது பெரும் குறையாகும்

இவ்வாறு இன்று செனட் சபையில் செனட்டர் டாக்டர் கல்பகே பேசுகையில் குறிப்பிட்டார்.

கூப்பனுக்கு வழங்கப்படவிருக்கும் இரண்டு கொத்து அரிசியின் விலை என்ன? எப்போது வழங்கப்படும்? என்ற தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படுமென்று தபால் மந்திரியும், செனட்டருமான திரு குமாரசூரியர் டாக்டர் கல்பகேயின் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

செனட்டர் கே எம் பி ராஜரத்தின பேசுகையில் 'யாருமே பழிவாங்கப்படமாட்டார்கள் என்று இந்த அரசு கதரிவித்தது. ஆனல் கல்வி அமைச்சர் இடமாற்றம் என்ற போர்வையில் பழிவாங்குகிறரே! என்று கூறினர்.

செனட்டர் எம் திருச்செல்வம் பேசுகையில் பல்கலைக்கழக மாணவருக்கு குறைந்த விலையில் நல்ல உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றார்.

சில் செய்யப்பட்ட இந்த புகார்களைத் தொடர்ந்து பொலிசார் மிகவும் எச்சரிக்கை யுடன்பலத்த கண்காணிப்புநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

— —

## பஸ் விபத்தில் 18 பேர் பலி

சென்னை, ஆகஸ்ட் 5

திண்டுக்கலிலிருந்து திருமலைக்குப் போய்க்கொண்டிருந்த பிரயாணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 18 பேர் பலியாகியிருக்கிறார்கள். 11 பேருக்குக் காயமேற்பட்டுள்ளது. மரணமானவர்களில் 6 பேர் பெண்கள்

முல்லைத்தீவு, செவ். முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் துரைராசா என்பவர் குமுளமுனையில் வைத்துக் கொலைசெய்யப்பட்டாரென முல்லைத்தீவுப்பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிபதி திரு தி திசநாயகா முன்னிலையில் விசாரணைககு எடுக்கப்பட்டது

எதிரிகளான குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம். தியாகராசா, வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் ஆகியோர் சார்பில் ஏற்பட்ட சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் கியூ. ஸி முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியான டாக்டர் கே இராசலிங்கத்தை 3 மணித்தியாலமாகக் குறுக்குவிசாரணை செய்தார் அதன்பின் மீகுதி விசாரணையை திரு பொன்னம்பலத்தின்வேண்டுகோளின்படி. இம் மாதம் 17.ம்திகதிக்குநீதிபதி ஒத்திவைத்தார். என்றுமில்லாதவாறு நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் மக்கள் கூட்டம் காணப்பட்டது.

எதிரிகள் சார்பில் புராடர் என். ஸ்ரீதரனின் அனுசரணையுடன் அட்வகேட் திரு. அரசுவால்டன், திருமோதிலால்நேரு ஆகியோரின் உதவியுடன் திரு.ஜி-ஜி. பொன்னம்பலம் கியூ-ஸி ஆஜரானர்,

# யாழ்.புகையிரதநிலையதாக்குதல்: இரு வாலிபர் கைது

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு வெளியே நடந்த தாககுதல் சம்பவத்தையொட்டிசந்தேகத்தின் பேரில் இரு வாலிபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றும் 3 வாலிபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் ஒரு வாலிபரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர். காயமடைந்தவர்களை பார்க்க 3 வாலிபர்கள் வார்ட்டிற்கு வந்திருந்ததாகவும் அங்கு நின்ற இரகசியப் பொலிஸார் சந்தேகத்தின் பரில் ஒரு வாலிபரை விசாரணை செய்தபோது மற்றும் இரு வாலிபர்கள் ஓடி விட்டதாகவும் ஒரு வாலிபரை மட்டும் பொலிஸார் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

3 வாலிபர்களை இரகசியப் பொலிசார் மட்டுவில் உடும்பிராய் தெல்லிப்பளை சுன்னாகம் ஆகிய இடங்களில் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு கோஷ்டியை சேர்ந்தவர்களே பல இடங்களில் பொதுமக்களைத் தாக்கிவருதாகவும் இது சம்பந்தமாக பொலிஸார் கடும் நடவடிக்கை எடுப்பார்களென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காயமடைந்த மூவர்களுள் இருவர் நேற்று ஆஸ்பத்தியினின்றும் வீடுசென்று விட்டனர். நவரத்தினம் சத்திரசிகிச்சைக்கு பின்னர் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

புகையிரத நிலையத்தில் பொலிஸ்காவல்நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. மாலை காலை வரும் ரயில் வண்டிகளில் பொலிஸாரும் இரகசியப் பொலிசாரும் கண்காணித்து வருகுஞர்கள்.

பஸ் நிலையங்களையும் பொலிஸாரும் இரகசியப் பொலிசாரும் கண்காணித்து வருகின்ஞர்கள்,

மாவிட்டபுரம் தெல்லிப்பழை போன்ற இடங்களிலும் நேற்று அரசாங்க ஊழியர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் கார்களுக்கு கல்லெறிந்த சம்பவங்களும் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது. பஸ்ஸிலும் சில பயமுறுத்தல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாம்.

# வேலணை முத்துமாரி அம்மன் கோவிலில் ஆலயப்பிரவேசம்!

அல்லைப்பிட்டி, புதன்

தீவுப்பகுதியில் பிரசித்திபெற்ற சைவ ஆலயங்களில் ஒன்ருகிய வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் இன்று ஹரிசனர்களுக்கு வழிபாட்டிற்காக திறந்து விடப்பட்டது. காவலூர் ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ இரத்தினம் தலைமையில்இவ் வைபவம் நடைபெற்றது. பரிபாலன சபையினர் எதிர் பார்த்ததுபோல் ஹரிசனர்கள் பெருந்தொகையாக கலந்து கொள்ளவில்லை. குறைந்தளவு தொகையான ஹரிஜனர்களே ஆசாரசீலர்களாய்ச் சென்று வழிபட்டனர். பெரும்பான்மையான ஹரிஜனர்கள் பொதுமக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பிருந்தால்தான் தாங்கள் உள்ளே செல்வதென்றும் அல்லாதுவிடில் தாங்கள் உட் செல்வதில்லையென்றும் கூறி ஆலயப்பிரவேசம் செய்ய முன்வரவில்லை, கோவிலின் பலிபீடத்தைச் சுற்றி எவரும் உட்செல்லாது தடைக்கம்பி போடப்பட்டிருந்தது. ஆலயநிர்வாகிகளில் ஒருபகுதியினர் பொதுமக்களின் அபிப்பிராயம் இன்றி ஆலயம் திறந்து விடலாகாதெனக் கூறிபேற்படி வைபவத்தில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச் செய்தார்கள். பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பின்றி பரிபாலன சபையினர் ஹரிஜனர்களை ஆலயத்தினுள் அனுமதித்ததை எதிர்த்து கறுப்புக் கொடிகாட்டி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பொலிஸ்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும் அவர்களை அடக்குவது சிரமமாகப் போய்விட்டது. கோவிலைச் சுற்றியிருந்த கடைகள் அப்போது பூட்டப்பட்டிருந்தன.

# தொகுதிக் கமையவே ஆசிரியரை நியமிக்க வேண்டும்

## கல்வியமைச்சருக்கு கோப்பாய் எம். பி. கடிதம்

நல்லூர், புதன்

''புதிதாக ஆசிரியர்களை நியமிக்கும்போது எனது தொகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு எனது தொகுதியிலுள்ள ஆசிரியர்களையே நியமிக்கவேண்டும்.''

இக்கோரிக்கையை கல்வி அமைச்சர் பதியுதீன் முகமதுவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டுள்ளார் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அச்சுவேலி விபசி பாடசாலை எனது தொகுதியான கோப்பாயிலேயேயுள்ளது. அங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பலர் இருக்கின்றனர். ஆயினும் அங்குவேறு தொகுதியிலுள்ள ஆசிரியர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று அறிகின்றேன். இந்த விடயத்தை முழுமையாக கண்டித்தே இக்கண்டனக் கடிதத்தை எழுதுகின்றேன். உடனடியாக இவ்விடயத்தை பரிசீலனைசெய்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனக் கோருகின்றேன்.

# 7 வட்டாரங்களில் 16 பேர் போட்டி

## 4 வருடங்களின் பின் நெல்லியடி பட்டினசபைக்குத் தேர்தல்

(உடுப்பிட்டி, புலோலி நிருபர்கள்)

கடந்த நான்கு வருடங்களாக விசேட ஆணையாளரின் பரிபாலனத்தின் கீழ் இயங்கிவந்த நெல்லியடிப் பட்டினசபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் இன்று பரபரப்பான சூழ்நிலையில் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்

நெல்லியடிப் பட்டின நூலக மண்டபத்தில் யாழ் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு கே கந்தசாமி முன்னிலையில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஏழு வட்டாரங்களிலும் மொத்தம் 16 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

தமிழ்க்காங்கிரஸ் சார்பில் கட்சிச் சீட்டுடன் நான்கு பேரும் சுயேச்சையாளர்களாக மூன்று பேரும், கம்யூனிஸ்ட் கட்சிச் சீட்டுடன் 2 பேரும் போட்டியிடுகின்றனர்.

7-ம் வட்டாரத்தில் மாமனும் மருமகனும் நேரடிப் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். மாமனும் மருமகனும் எக்காலத்தில் தராசையே தமது சின்னமாகத் தெரிவு செய்ததினல் தேர்தல் அதிகாரி பூவா தலையா போட்டு மருமகனுக்கே தராசு சின்னத்தை வழங்கினர். மருமகன் த. கா. ஆதரவாளர். மாமன் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்,

பேட்டியிடும் அபேட்சகர்களும் சின்னங்களும் வருமாறு:-

1-ம் வட்டாரம் [வதிரி ஐயாத்துரை கந்தையா (சைக்கிள்) சின்னையா சந்தையா (தராசு).

2-ம் வட்டாரம் [நெல்லியடி] சிவசுப்பிரமணியம் குமாரசூரியர் (சைக்கிள்) பாஸ்கரன் நடேசு (தராசு)

3-ம் வட்டாரம் [மருதடி] ஜெயசிங்கம் சபாரத்தினம் (நட்சத்திரம்) கந்தையா சுவாமிநாதர் குடை)

4-ம்வட்டாரம் [நுணுவில்] சின்னப்பிள்ளை செல்லையா (விளக்கு). கணேசசிங்கராசா நாகப்பர்(கண்), முருகர் இரத்தினம் (வாள்)

5-ம் வட்டாரம் [அத்துளு] கனகசுந்தரம் நடேசு (சைக்கிள்). சிவராஜா கந்தவனம் (குடை)

6-ம் வட்டாரம் [கனுவில்] தேவசகாயம்சந்தியபிள்ளை வஸ்தியாம்பிள்ளை (சைக்கிள் கிருஷ்ணபிள்ளை ஆழ்வாப்பிள்ளை (தராசு) சுந்தரம் ஆண்டி (நட்சத்திரம்)

7-ம் வட்டாரம் [கலட்டி] சபாரத்தினம் சண்முகம் (விளக்கு) செல்வராசா பொன்னையா (தராசு)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6—7 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளால் ''பார்வதி தேவியார் திருமணம்'' என்ற பொருள் பற்றியபிரசங்கமும் இரவு 7 மணிக்கு திருவூர்களும் இரவு 8--9.30 வரை செல்வி சிவசோதி வரத்தினத்தின் இன்னிசைச்சேரியும்நடைபெறும்.

# கென்யாட்டா புதல்வி மேயராகிருர்

நைரோபி, ஆக. 5

கென்யா அதிபர் ஜோமோ கென்யாட்டாவின் புதல்வி செல்வி மார்கரெட் கென்யாட்டா கென்யாதலைநகர் நைரோபி முனிசிப்பல் சபையின் மேயராகத தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தப் பதவி பெறும்முதல்ஆபிரிக்கப் பெண்மணி இவரே. கடந்த வருடம் இவர் துணைமேயராக இருந்தார்.

## ரயிலுக்குப் பலி

திருநெல்வேலி, வியா

நான்கு பிள்ளைகளின் தகப்பஞர் ரயிலுக்குப் பலியாஞர். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் இச் சம்பவம் நடந்தது.

யாழ்ப்பாணம் செட்டிதாழ்வைச் சேர்ந்த வேலுப்பிள்ளை (45 வயது) என்பவரே நேற்று முன்தினமிரவு காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டு வந்த ரயிலுக்குப் பலியானவராவர்.

யாழ் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு இராசநாயகம் மரணவிசாரணை நடாத்திஞர். விபத்திஞலேற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நாம்பென், ஆக 5

கம்போடியாவில் அமெரிக்க நிருபர் ஒருவரை விட்காங்குகள் சிறைப்பிடித்து வைத்துள்ளனர். அமெரிக்க 'டைம்ஸ்' பத்திரிகையின்நிருபர் இவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

எரு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்க. தாமோதர விலாஸ், 239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் போன்: 7065. 3041

உரும்பராய் கிழக்கில் ப. நாகலிங்கம் அவர்களுக்குச் சொந்தமான 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. சுப்பிரமணியம் புரக்டர், உரும்பிராய். 2176

ஆதனம்:
யாழ்ப்பாணம் மாநகரசபை 9-ம் வட்டாரம் கனகரத்தினம் வீதி அருகில் உள்ளதும் திருமகள் ரோட், சாஸ்திரியார் ஒழுங்கை இரு வழியிலும் பாதை உள்ள 8 பரப்பு குடியிருக்கும் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சி. சிவஞானசுந்தரம், 50, ஆரியர்வீதி அல்லது 489, நாவலர்ரோட், யாழ்ப்பாணம். 3043

## தவறிவிட்டது

சுன்னாகம் கருவாட்டுக் கடையடியில் ரசீதுகள், ஒப்பந்தப்பத்திரங்கள், பிரதானமான கடிதங்கள் அடங்கிய புற்பை ஒன்று 4-8-70-ந் திகதி 10 மணியளவில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ரூபா 50/- சன்மானம் வழங்கப்படும். 3040

## தேவை

பிணைப்பணம் கட்டக்கூடிய பணப் பொறுப்பாளர் ஒருவரும், இரண்டு விற்பனைப் பிரதிநிதிகளும் உடன் நேரில் வரவும். மனேஜர், ஆர். டி. என். ஸ்ரோர்ஸ் அன் சேல்ஸ் ஏஜென்சி, மேல் மாடி, No 3/1, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3035

அம்பன், புதன்
வரணிக் கிராமசபையின் புதிய உபதலைவராக திரு வெ. குமாரசாமி கடந்த மாதாந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

## முக்கிய அறிவித்தல்

இத்தால் அறிவிப்பது, காரைநகர் கிராமசபைக்கு 1970-ம் ஆண்டு வரை செலுத்தப்படவேண்டிய சோலைவரி நிலுவைகளை 30-8-70-ந் திகதிக்கு முன்பு செலுத்தப்படவேண்டும். அங்ஙனம் வரி செலுத்தத் தவறுவோர் மீது சோலைவரிச் சட்டத்தின் 9-ம் பிரிவின்படி வெலியாத்து நடவடிக்கை, மறு அறிவித்தலின்றி கையாளப்படும்.

கா. க. விசுவலிங்கம்,
தலைவர்,
கி. ச. காரைநகர்.
2393

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 6—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள். 5-30 நாளையசந்தி
இரவு 6-00 லயவின்யாசம், 6-30 விவசாயநிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9 30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

கரபந்தாட்ட

## சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற கழகங்கள்

அம்பன், புதன்
வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து தலைமையில் பொலிகண்டி விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய இரு கழகங்களின் விபரம் வருமாறு:-

## விளையாட்டுப் போட்டியில் பரிசு பெற்றோர்

புத்தூர், புதன்
புத்தூர் மகாத்மாஜீ சனசமூக நிலைய ஆண்டுவிழா புத்தூர் கிராமசபை உறுப்பினர் திரு. மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிலையத்தினரால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம் வருமாறு:

25 மைல் சைக்கிள் ஓட்டம்: ஆர். இரத்தினம்-குமரகுருபரன் சனமூக நிலையம், என். சிவலிங்கம்- விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம், கே. சின்னராசா-காந்தி சனசமூக நிலையம்.

8 மைல் மரதன் ஓட்டம்: வி. தாமதாஸ்- வி. க; கே. தனராசா- லிங்கன் ச. ச. நிலையம், வி. சிவஞானம்- சர்வோதய விளையாட்டுக் கழகம்.

திரு. செ. சூடாமணி, திரு. சொ. விசுவலிங்கம், திரு. ச. லோகேஸ்வரநன், திரு. செ. தர்மராசா ஆகியோரும் பேசினர்.

வெற்றி பெற்றவர்களுக்கு இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு க. முருகேசபிள்ளை பரிசில்களை வழங்கினர்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்
குபபிழான் கற்கரைக்கற்பக விநாயகர் ஆலய உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது 16ந் திகதி தீர்த்தமும் 17ந்திகதி ஊர்வலமும் நிகழும். திருவிழாக் காலங்களில் தினமும் இரவு சமயப்பிரசங்கங்கள் நிகழும்.

0 0 0

யாழ்ப்பாணம், புதன்
மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இவ்வாலயத்து பழைமையான கட்டுத்தேரை மாற்றி புதுத்தேர் ஒன்றைச் செய்வதற்கானவேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

## 3-வது முறையும் தெரிவு

ஆழியவளை, புதன்
செம்பியன்பற்று கிராம[illegible] உபதலைவராக மூன்றுவது தடவையும் திரு. செ. வேலுப்பிள்ளை போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

புத்தூர், புதன்
புத்தூர் மகாத்மாஜி சனசமூகநிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: வே கணபதிப்பிள்ளை, உப தலைவர்: தா கந்தையா, செயலாளர்: க செல்லப்பு, உப செயலாளர்: சி அரியரத்தினம், தனாதிகாரி: வ க செல்லப்பு 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது

0 0 0

ஆவரங்கால் சாந்தி நாடகமன்ற புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: க திரவியம், உப தலைவர்: கி சின்னராசா செயலாளர்: செ தங்கராசா உப செயலாளர்: க குண்டுமணி, தனாதிகாரி: வ சிவஞானம். க செல்லத்துரை, ஐ சதானந்தன், க பொன்னையா, க தம்பித்துரை, க அரியகுட்டி க தர்மகுலசிங்கம் ஆகியோர் நிர்வாக உறுப்பினராகத் தெரியப்பட்டனர்.

0 0 0

புத்தூர் அற்புதாலயா கலாமன்றத்தின் புதுவருட நிர்வாகிகள்: தலைவர்: தா கந்தையா. உப தலைவர்: வே செல்லமுத்து, செயலாளர்: இ மயில்வாகனம், தனாதிகாரி: க செல்லத்துரை 21 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது

0 0 0

புத்தூர், ஆவரங்கால் மேற்கு சர்வோதய சனசமூகநிலையத்தின் புதுவருட நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: சு கி சின்னையா உப தலைவர்: க இராசையா பொதுச் செயலாளர்: க திரவியம், உப பொதுச் செயலாளர்: க கார்த்திகேசு, தனாதிகாரி: க பொன்னையா, உப தனாதிகாரி: பா மயில்வாகனம்.

செ தங்கராசா, இ மயில்வாகனம், வெ மகாதேவ், ஐ அருமைத்துரை, சி ஆனந்தம், க செல்லத்துரை, சி முருகுப்பிள்ளை ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினராகவும். விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களாக வெ கந்தசாமி, சி யோக[illegible]தன், வ. சிவஞானம் ஆகி[illegible]ரும் தெரியப்பட்டனர்.

0 0 0

சுழிபுரம், புதன்
[illegible] சுகாதார சேவைத் [illegible] சங்க புதிய நிர்வாகிகளாக பி[illegible]வரு

# "சோஷலிஸபாதையில் செல்வதே எமது அடிப்படை நோக்கம்"

### ஜாதிக குரு சங்க வடமாகாண கிளைக்கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், வியா
இலங்கையிலுள்ள சகல ஆசிரியர்களும் தம்மிடையேயுள்ள குரோதங்களை மறந்து ஐக்கியப்பட்டு ஒரே குரலில் உரிமைக்குரல் எழுப்புவதன் மூலந்தான் தமது உரிமைகளைப் பெற முடியும்.

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத்தின் உதவிக் காரியதரிசியான திரு சந்திரபால வீரசேகரா யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாகாணக் கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த காலத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆசிரியர் சங்கங்கள் இருந்தன. ஆனால் ஆசிரியர்களை ஒரே சம்மேளனத்தின்கீழ் இணைப்பதற்காக அத்திவாரமிடப்பட்ட ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கம் சகல சங்கங்களுக்கும் அழைப்பு விட்டபோது எட்டு ஆசிரியர் சங்கங்கள் தான் இவ்வேண்டுகோளுக்குச் செவிமடுத்தன. இலங்கையில் இன்று உருவாகியுள்ள ஆசிரியர்சங்கங்களின் சம்மேளனம் ஆசிரியர்களின் பல்வேறு பிரச்னைகளுக்காகப் போராடி வருகின்றது. மனிதகுலம் உரிமையைப் பெறுவதாகவிருந்தால் இயக்கங்கள் நடத்தவும் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும் வேண்டும். அநீதி இழைக்கப்படும்போது நாம் அதை வன்மையாக எதிர்க்க வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்நாட்டில் நிலவிய பயங்கர ஆட்சியின்போது கூட எமது சங்கம் தனது இயக்கத்தைக் கைவிடவில்லை. பழைய கல்விமந்திரியின் செயல்களையும் கல்வி இலாகாவின் எதேச்சாதிகாரப் போக்கையும் கண்டித்து ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கம் இலங்கையின் பல நகரங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பெருங் கூட்டங்களையும் நடத்தியது. இந்தக் கஷ்டமான காலங்களில் எமது அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது. அந்நிலையிலும் யாழ்ப்பணக் கிளை எமக்குப் பக்கபலமாக இருந்தது. சிங்களவர், தமி

யோன், எம். குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: வ கிருஷ்ணபிள்ளை, உப தலைவர்கள்: எ சிவலிங்கம், பொ. சிவஞானசுந்தரம், காரியதரிசி: எம். குமாரசாமி. தனாதிகாரி: ஜீ திருச்செல்வம், உதவிச் செயலாளர்கள்: கே. கருணாகரன், இவர்களையடக்கிய 19 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது (குவிம)

## 'எல்லா உயர்வுக்கும் கல்வியே முக்கியம்"

கொக்குவில், புதன்
''எப்படி இந்த உயிரைக் காப்பாற்றி வாழவேண்டும் என எண்ணுகிருேமோ, அந்த உயிரினும் பாக்க மேலானது ஒழுக்கம் நல்ல நெறியிலே வாழ்ந்துவரும் முறைதான் ஒழுக்கம். அவ்வொழுக்கம் வளர்ச்சிபெற கல்வி முக்கிய கருவியாகும்

கல்வியால் அறிவு, அறிவினால் ஒழுக்கம், நல்லொழுக்கத்தால் உயர்வுகிடைக்கும். இவற்றினால் மேலான இறையன்பும் கிட்டும்''

இவ்வாறு, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைப் பெற்றோர்தின விழாவின்போது, வித்தியாலய ஸ்தாபகரும் சமயப்பெரியாருமாகிய கொக்குவில் சைவப்புலவர் திரு. த குமாரசுவாமிப்பிள்ளை தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

திரு. த. குமாரசுவாமிப்பிள்ளையின திருவுருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துபரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம் உரையாற்றினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. ஏ ஆர். இராசநாயகத்தின் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு ஞானப்பிரகாசம் பேசுகையில், இலங்கையின் பல பாகங்களிலும் சைவ, தமிழ் சமூக சேவையாற்றியவர். உடல்பொருள் ஆவி, அத்தனையையும் சமய வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வாழ்பவர் திரு. குமாரசுவாமிப்பிள்ளை என்றுர்

வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய செனட்டர் திரு. த. நீதிராசாபேசியதாவது:

''என்னை இந்த நிலையிலே ஆக்கிவைத்த பெருமை புலவரையேசாரும். புலவர் இல்லாவிட்டால் ஞானபண்டித வித்தியாசாலையே தோன்றியிருக்க மாட்டாது' அவரைப் போற்றுவதில் கொக்குவில் மக்கள் பெருமைப்படவேண்டும். அவருடைய உருவப்படத்தை எப்பொழுதோ பாடசாலையில் திறந்துவைத்திருக்க வேண்டும்''

புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் திரு. கு. வி. செல்லத்துரை, தி. அ. பஞ்சாட்சரம், திரு. ம. சர்வானந்தன் உட்படப் பலர் பேசினர்.

மாணவமாணவிகளின் பாட்டு நடனம், நாடகம், வில்லிசை என்பனவும் இடம் பெற்றன.

## பொன்னாலை கொடியேற்றம்

சுழிபுரம், புதன்
பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் கொடியேற்றத் திருவிழா இம்மாதம் எட்டாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பதினேழு தினங்கள் திருவிழா நடைபெறும். 24-ம் திகதி தேர்த்திருவிழாவும் உறியடி உற்சவமும் நடைபெறும். அடுத்த தினம் பொன்னாலையிலிருந்து அழகிய மஞ்சத்தில் சுவாமி தீர்த்தமாடுவதற்காக திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவார். அங்கு அன்னதானம் நடைபெறும்.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் — ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2வது வாரம் வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
என், எஸ். கிருஷ்ணன் ரி. ஏ, மதுரம் - டெய்ஸி ராணி நடித்த
67-ல் என்.எஸ்.கிருஷ்ணன்
(எஸ், ரி. ஆர். பிலிம்ஸ்)
அமரர் அண்ணு, தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.
பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

விளம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

நடித்த

இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக்கொண்டு
உருவாக்கப்பட்ட சித்திரம்.

மீரு மூவிஸ்

# வெண்சங்கு

தயாரிப்பு: டைரக்ஷன்: W. M. S. தம்பு



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

திரைகளில்!

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா] காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன் — சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


எம். தம்பிமுத்து தலைமையில் பொலிகண்டி விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய இரு கழகங்களின் விபரம் வருமாறு:-

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகத்தினருக்கும் பருத்தித்துறை யூனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தினருக்கும் நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் பருத்தித்துறை யூனைற்ரெட் விளையாட்டுக்கழகத்தினர் 2 வெற்றியும், பாரதிவிளையாட்டுக்கழகத்தினர் ஒரு வெற்றியும் பெற்றதால் பாரதிவிளையாட்டுக்கழகத்தினரை யூனைற்றெட விளையாட்டுக்கழகத்தினர்வெற்றியீட்டினர்.

இன்புருட்டி விளையாட்டுக்கழகத்தினருக்கும் அல்வாய் யூனியன் விளையாட்டுக்கழகத்தினருக்கு மிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் யூனியன் விளையாட்டுக்கழகத்தினர் 2 வெற்றியும் இன்புருட்டி விளையாட்டுக்கழகத்தினர் ஒரு வெற்றியும் பெற்றதால் இன்புருட்டி விளையாட்டுக்கழகத்தினரை அல்வாய் யூனியன் விளையாட்டுக்கழகத்தினர் வெற்றியீட்டினர்.

— —

தாவடி, புதன்

உடுவில் கிராமசபையைச் சேர்ந்த தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகே உள்ள ஒழுங்கை சீர்படுத்தப்பட்டு வருகிறது.


ஸ்ரீகாலிங்கன்
இணுவில
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
THE VALLEY OF GWANGI

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 945-P.M.
TROPICS BY NIGHT
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-30, 7-00 & 9-45 p.m
Poya days 10-30 A.M.
Shakespear's
ROMEO
and
JULIET
(Is no ordinary Love Story)
Starring- 15 years old OLIVIA HUSSEY (Girl)
17 years old LEONARD-WHITING (Boy)


...ப உபதலைவராக மூன்றுவது தடவையும் திரு. செ வேலுப்பிள்ளை போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# இன்றைய பலன்

ஆடி மாதம் 21-ம் திகதி

[6-8-70]

மேஷம்- கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும்.

ரிஷபம்- புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம்- பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

கடகம்- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும்.

சிம்மம்- கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. காதலர்கள் எண்ணம் கைகூடும். நல்லதினம்.

கன்னி- அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பார்த்த பதவிஉயர்வுக்கு இன்று முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும்.

துலாம்- இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

விருட்சிகம்- புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும்.

தனு- திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திருப்பமுடியும்.

மகரம்- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் ஏற்படமுடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும்.

கும்பம்- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

மீனம்- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். தாய்வழி ஆதரவுதாராளமாக கிடைக்கும். வாகனநலனுக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

கந்தசாமி, ... வ. சிவஞானம் ஆகியோரும் தெரியப்பட்டனர்.

0 0 0

சுழிபுரம், புதன்

தேசிய சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: பொ தேவராசா, உபதலைவர்: கே கந்தசாமி, ரி அருளானந்தம், ஜே கந்தசாமி, செல்வி லூசி தோமஸ், காரியதரிசி: ஆ. செந்தில்நாயகம், உப காரியதரிசி: மா ஐயன்ஞ, வீ சிவசுப்பிரமணியம், தனாதிகாரி: எம் சந்தியாப்பிள்ளை, உப தனாதிகாரி: எஸ் ஜீவரத்தினம், நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர். ......

## தீவுப்பகுதிச் செய்திகள்

—ஊரதீவு நிருபர்—

### 'உப தபால் நிலையம் தேவை'

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தில் உப தபால் நிலயமொன்றையும், தச்சுத் தொழிற்சாலை யொன்றும் நிறுவுக'

மேற்கண்டவாறு கோரும் மகஜர் ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புங்குடுதீவு நான்காம் வட்டாரக் கிளையினர் அரசினருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

### பஸ் சேவை சீர் இல்லை

யாழ்ப்பாணம்-புங்குடுதீவு பஸ் சேவை தினசரி சீர்கேடாக இருக்கிறது இதனுல் பாடசாலை பிள்ளைகளுக்கும் அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்லுவோருக்கும் சிரமம் ஏற்படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது

— —

## இளம் பெண் துரவுக்குள் வீசப்பட்டார்

எழுதுமட்டுவாள், புதன்

இரவு நடுநிசியில் இளம் பெண் ஒருவரை தூக்கிச் சென்று துரவுக்குள் எறிந்த சம்பவம் எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்றுள்ளது

இளம் பெண்ணின் வாயினுள் துணியை அடைத்து தூக்கிச் சென்று சுமார் 500 யார் தூரத்திலுள்ள துரவுக்குள் விஷமிகள் வீசிவிட்டுச் சென்றார்களாம், பெண்ணைக காணமல் பெற்றோர் தேடியபோது அவர் வாயில் இரத்தம் கசிய வீட்டுக்கு ஓடிவந்தாரம்.

பெருங் கூட்டங்களையும் நடத்தியது. இந்தக் கஷ்டமான காலங்களில் எமது அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது' அந்நிலையிலும் யாழ்ப்பணக் கிளை எமக்குப் பக்கபலமாக இருந்தது. சிங்களவர், தமிழர் இன ஒற்றுமைக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். எமது சங்கத்தில் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், கிறிஸ்தவர், இந்துக்கள், பௌத்தர்கள் ஆகியோர் சாதி, மத. இன, மொழி பேதமின்றி அங்கத்துவம் பெற்று தமது உரிமைக்காகக் குரல் எழுப்பி வருகின்றார்கள் இன்று இலங்கையிலேயே மிகப் பெரிய ஆசிரியசங்கமாகி 40,000 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது'

எமது சங்கத்தின் அடிப்படை நோக்கம் இந்நாட்டை சோசலிஷப் பாதையில் வழிநடத்திச் செல்வதாகும். அந்த மார்க்கத்திற்கான கல்விமுறையை அமைப்பதற்கு நாம் முன்வரவேண்டும் சோஷலிஷத்தை அடைவதென்பது அரசாங்கம் நினைப்பது போன்று சுலபமான காரியமன்று. அடிப்படையில் எமது நாட்டை ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்தும் உள்நாட்டு முதலாளிவர்க்கத்திடமிருந்தும் விடுவிப்பதனுலேயே நாம் சோஷலிச இலக்கை அடைய முடியும்.

''கடந்த அரசாங்கம் ஆசிரியர்களுக்கு இழைத்த இன்னல்களைத் தாம் நீக்குவதாகத் தற்போதுள்ள அரசாங்கம் உறுதியளித்துள்ளது இந்த உறுதிமொழிகள் காப்பாற்றப்படவேண்டும் இல்லையேல் நாம் உரிமை இயக்கங்களை முன்னெடுத்துச்சென்றுபோராட்டங்களை நடத்தவேண்டும். ஆசிரியர்களுக்கு இன்றைய அரசாங்கம் வழங்கியுள்ள சிவில் பென்சன் உரிமை, அரசியல் உரிமை, ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய இடமாற்றச்சபை போன்றவை பலனுள்ளவையாக அமைகின்றன. இவை மட்டும் எமது உரிமைகள் அன்று. மேலும் எமது பல்வேறு கோரிக்கைகளையும் வென்றெடுக்க, நாம் எமது சங்கத்தை வடமாகாணம் உட்படச் சகல பிரதேசங்களிலும் அங்கத்துவத்தைக் கூட்டுவதினுல் பலப்படுத்தி, ஐக்கியத்தை ஏற்படுத்துவதனுல்தான் சாத்தியமாக்க முடியும்''

இக்கூட்டத்திற்கு திரு வ. கிருஷ்ணபிள்ளை தலைமை வகித்தார். மேலும் திருவாளர்கள் எ. சிவலிங்கம், க. கருணுகரன், பி. முருகையா, எஸ். சேவற்கொடி

...திரு. குமார சுவாமிப்பிள்ளை என்ருர் வைபவத்தில் கலந்து

...நீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவார். அங்கு அன்னதானம் நடைபெறும்.


## விளம்பரம்

பூநகரி, பல்லவராயன்கட்டு, முருகண்டி, உருத்திரபுரம், ஆனையிறவு, சுதந்திரபுரம், மண்டைதீவு ஆகிய பகுதிகளிலுள்ளவர்கள் பின்வரும் எமது ஏஜன்டுகளிடம் ''ஈழநாடு'' பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

1. திரு. வல்லிபுரம் கதிரவேலு, வாடியடி, பூநகரி.
2. திரு. சரவணமுத்து வேலாயுதநாதன், மதிபவனம், 16-ம் கட்டை, பல்லவராயன் கட்டு.
3. திரு. எம். தம்பையா, கணேசன் கபே, முருகண்டி.
4. திருமதி ம. நடராசா, தேநீர்க்கடை, அக்கராயன்குளம்.
5. திரு. என். கதிர்காமத்தம்பி, நியூஸ் ஏஜன்ட், உருத்திரபுரம்.
6. திரு. கே. கணபதிப்பிள்ளை, மே/பா திரு. க. ஆழ்வாப்பிள்ளை, புதிய தேநீர்க்கடை, உப்பளம், ஆனையிறவு.
7. திரு. செல்லையா, நியூஸ் ஏஜன்ட், சுதந்திரபுரம் சந்தி, சுதந்திரபுரம்.
8. திரு. நா. சிவசுப்பிரமணியம், மண்டைதீவு.

2394



## KALANILAYA CAMBRIC

கலாநிலைய கேம்பிறிக்

## WRITING PADS

'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

# 'ஈழநாடு'

(வர்த்தக அச்சகப் பகுதி)

55, வெள்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு - இஸ்ரேல் மறைமுகப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும்

## ஈராக் - எகிப்து சமரச முயற்சி தோல்வி

நியூயோர்க், ஆகஸ்ட் 5

இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசு, ஜோர்டான் ஆகிய அரபுநாடுகளுக்குமிடையில் மிக விரைவிலேயே மறைமுகமாக அவமதிப்பேச்சுக்கள் ஆரம்பமாகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்காசியாவுக்கு ஐ. நா. அமைதிப் பிரதிநிதி டாக்டர் குனர்ஜாரிங் நேற்று ஐ. நா. விலுள்ள அரபுநாடுகளின் பிரதிநிதிகளையும். சோவியத் பிரதிநிதியையும் சந்தித்துப் பேசினார். மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்துள்ள யோசனைகள் குறித்து இவர்கள் ஆலோசித்ததாகத் தெரிகின்றது.

மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான நல்லவொரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறதென்று ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் கூறியிருக்கிறார். டாக்டர் குனர்ஜாரிங்குடன் ஆலோசனைகள் நடத்திய பின் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் இன்று ஐ நா வில் கூடுகிறார்கள். மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளை இவர்கள் ஆராய்வார்கள் என்று தெரிகின்றது.

### இஸ்ரேல் பதில் அனுப்பியது

அமெரிக்காவின் யோசனையை ஏற்றுக்கொண்டு இஸ்ரேல் அரசு பதில் அனுப்பி விட்டது. முன்பதாக இஸ்ரேல் ஆட்சிமன்றமும் அமெரிக்க யோசனைகளை ஏற்றுக் கொண்டது. பிரதமமந்திரி திருமதி கோல்டாமெயர் நிகழ்த்திய உரையொன்றைத் தொடர்ந்து இஸ்ரேல் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் 66 பேர் அமெரிக்க யோசனைகளை ஆதரித்தும் 28 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்.

அமெரிக்க யோசனைகளை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஐக்கிய அரபுக் குடியரசுடனும், ஜோர்டானுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்த ஒரு பிரதிநிதியை நியமிக்கவும் நாம் தயாராய் இருக்கிறோம், ஆனால் அமைதிக்கான நிபந்தனைகள் பூர்த்தியாவதற்கு முன்னர் பிடித்த இடங்களிலிருந்து ஒரு சிப்பாயைக் கூட அப்புறப்படுத்தமாட்டோம் என்று திருமதி மெயர் கூறினார்.

### லிபியா மாநாடு

ஒத்திவைக்கப்பட்ட அரபு வெளி நாட்டமைச்சர்களின் மாநாடு இன்று ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது ஐக்கிய அரபுக் குடியரசுக்கும். ஈராக்கிற்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்துவேற்றுமைகளைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த லிபியா அதிபர் கேணல் கடாஃபி தாயகம் திரும்பியுள்ளார்.

லிபியா மாநாட்டுக்கு பிரதிநிதியொருவரையாவது அனுப்பிவைக்கும்படி கேணல் கடாஃபி ஈராக் தலைவர்களைக் கேட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது.

ஆட்சிமன்றத்தில் லிபியா புரட்சி சபை ஐக்கிய குடியரசுத் தலைவர் அப்துல் நாஸரைப் பாராட்டி அறிக்கையொன்றை விடுத்திருக்கின்றது.

பாக்தாத்ரேடியோ நேற்று ஒலிபரப்பிய ஒரு செய்தியில் ஐக்கிய அரபுக் குடியரசு அமெரிக்க யோசனைகளை ஏற்றுக்கொண்டதைக் குறைகூறியது.

## சாம்பல் கற்களாலான தீப்பிடிக்காத வீடு

சென்னை, ஆகஸ்ட் 5

குப்பையில்கொட்டும் சாம்பலை மூலமாகக்கொண்டு தயாரிக்கப்படும் செங்கற்களால் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்ட சென்னையில் எற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

பெரியஇயந்திர ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சாம்பலை எங்கே கொட்டுவது என்ற பிரச்னையைச் சமாளித்து உபயோககரமான திட்டத்தை செயலாக்க முற்பட்டுள்ளனர்.

— —

அ. இ. கட்டுரை

## போட்டியில் தமிழ் மாணவி வெற்றி

புதுடில்லி ஆகஸ்ட் 5

டெல்லி கருத்தடை இலாகா நடத்திய கட்டுரைப்போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

ஆங்கிலத்தில்நடைபெற்ற இக்கட்டுரைப் போட்டியில் அகில இந்தியாவிலும் முதலிடத்தைப் பெற்றவர் கல்லூரி மாணவி செல்வி கலைச் செல்வி என்பவர். முதற் பரிசு 500 ரூபாவாகும். மூன்றுவது இடமும் தமிழகத்தைச் சேர்ந்த செல்வி லலிதா என்னும் மாணவிக்குக் கிடைத்துள்ளது.

— —

காளைச் சின்னம்

## நிஜலிங்கப்பா 11 நாள் சாட்சியம்

சென்னை ஓகஸ்ட் 5

காளைச் சின்னம் யாருக்கு? என்ற பிரச்சினை சம்பந்தமாக சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்

## 'சிவாஜியைக்கண்டிக்காதீர்!' எம். ஜி. ஆர். வேண்டுகோள்

சென்னை, ஆகஸ்ட் 5

"சிவாஜிகணேசனைக் கண்டித்து] கழகத்தோழர்கள் எவரும் கூட்டங்கள் நடாத்தப்படாது"

இவ்வாறு எம். ஜி. ஆர். தி. மு. க. வினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

"நானும் சிவாஜிகணேசனும் சந்திக்கவேண்டிய இடம் மக்களின் உள்ளம் தான். ஏற்கனவே நான் விடுத்துள்ள அறிக்கை ஒன்றுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையும், சில பத்திரிகைகளின் விஷமத்தனமான செய்திவிளக்கமும் சிலரின் மேடைப்பேச்சும் என்மேல் அன்புகொண்ட ரசிகர்களின் உள்ளத்தை வேதனைப்படுத்திவிட்டதாக அறிகிறேன். அதற்காக அந்த நண்பர்கள் கண்டனக்கூட்டங்கள் நடத்துவதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. என்மீது அன்புகொண்டவர்கள் அனைவரும் இந்தமாதிரி முயற்சிகளில் ஈடுபட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

# இருதய நோயை அறிய ஒலி வழி முறை

## அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

நியுயோர்க், ஆக, 5

மனிதனின் இருதயம் எப்படி இயங்குகிறது? அதன் ரகசியங்கள் என்ன? 'ஸோனர்' இந்த ரகசியங்களைத் துருவி ஆராய கை கொடுக்கிறது. அமெரிக்காவின் விண்வெளித் திட்டம் மருத்துவத் துறைக்குத் தந்துள்ள பெரும் பரிசு இந்த 'ஸோனர்'.

'ஸோனர்' செவிக்குக் கேட்காத ஒலி என்று கூறப்படுவதுண்டு. ஸோனர் இப்பொழுது ஆராய்ச்சி கட்டத்தில் இருந்தாலும், மருத்துவத் துறையில் அது சிறப்பாகப் பயன்படும் என்பது உறுதியாகிவிட்டது.

அண்மையில் சில சோதனைகள் நடத்தப்பட்டன. இருதயத் துடிப்பு, குருதி ஓட்டம் முதலியவற்றைப் பற்றி அடிப்படையான தகவல்கள் தரக்கூடியது ஸோனர் என்பது இந்தச் சோதனைகளின் போது புலனாயிற்று. இதுவரை மேற்கூறிய தகவல்களை இருதய அறைகளில் ஒன்றுக்குள் 'கத்தீட்டர்' என்று கூறப்படும் மெல்லிய குழாய் ஒன்றைப் புகுத்தித்தான் பெற வேண்டும் வேறுவழியில்லை. "கார்டியக் கத்தீட்டரைஸேஷன்" என்று இந்த முறைக்கு பலமணி நேரம் பிடிக்கும். நோயாளியை மருத்துவ மனையில் கிடத்தித்தான் செய்ய வேண்டும், அத்துடன் குருதியின் மாதிரிகள், எக்ஸ்-ரே படங்கள் வேறு எடுக்கவேண்டும்.

நேர்மாறாக சிறப்புப் பயிற்சி பெற்ற ஒருவர், மருத்துவர் ஒருவரின் அலுவலகத்திலோ நோயாளியின் கட்டிலின் அருகிலோ இருந்து கொண்டு ஸோனர் சோதனைகளை நடத்த முடியும், ஒரு சில விநாடிகளில் முடிந்துவிடும்.

ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்து மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், 'நாஸா' என்ற அமெரிக்க விண்வெளி நிலையத்தின் ஏம்ஸ் ஆராய்ச்சி நிலையத்து விஞ்ஞானிகளும் இந்த முறையைக் கண்டு பிடித்துள்ளனர். இந்த மருத்துவப் பள்ளியும் ஆராய்ச்சி நிலையமும் கலிபோர்னியாவில் இருக்கின்றன. 51 நோயாளிகளுக்கு ஸோனர் முறைப்படி சோதனைகள் செய்து பார்த்ததில் நல்ல பலன்கள் கிடைத்தன.

# வலி இல்லை, செலவு குறைவு

## பொதுமக்களின் உணவுப் பொருட்களை சுரண்டுகிறவர்களுக்கு ஆபத்து

### தேர்தல் தொகுதி தோறும் சோதனைக் குழுக்கள் வரும்

கொழும்பு, புதன்

பொதுமக்களின் அன்றாடதேவைகளான அரிசி மாவு, சீனி மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் நேரகாலத்தோடு தேவையானசமயங்களில், தேவையான அளவு மக்களுக்குக்கிடைக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து அறிக்கை கொடுப்பதற்கென ஒவ்வொரு தேர்தல் தொகுதிதோறும் சோதனைக் குழுக்களை நியமிக்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

இந்தக் குழுக்கள் தேர்தல் தொகுதிகளின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இயங்குவதாய் இருக்கும்பிரதேச உணவு அதிகாரிகள் பகுதி பொலிஸ் அதிகாரிகள், கிராமசேவகர்கள் மக்கள் செல்வாக்குள்ள இரு பிரமுகர்கள் ஆகியோரும் இந்த குழுக்களில் இடம் பெறுவார்கள்.

பொதுமக்கள் வணிகர்களால் சுரண்டப்படுவதைத் தடுப்பதுவே இந்தக் குழுக்களின் முக்கிய நோக்கமாக இருக்கும். நாட்டிலுள்ள சகல தேர்தல் தொகுதிகள் தோறும் இம்மாதிரி குழுக்கள் அமைக்கப்படும். உணவுப் பொருட்களைப் பதுக்கியோ, வேறுவகையிலோ பொதுமக்கள் சுரண்டப்படுவது சம்பந்தமாகத் தகவல் கிடைக்கும் பட்சத்தில் அவரவர்கள் பற்றி அரசாங்கத்துக்கு உடனே தகவல் கொடுத்து நடவடிக்கை எடுப்பதற்கு இந்தக் குழுக்கள் உதவுபவையாகவும் இருக்கும்.

தேசிய வெளி வர்த்தக அமைச்சர் திரு டி பி. இலங்கரத்ன தயாரிக்கும் விதிகளுக்கமைய இந்தக் குழுக்கள் இயங்க விருக்கின்றன.

பாவிப்பாளர்களுக்கு உணவுப் பொருட்கள் சாதாரண விலைக்கு கிடைக்கின்றனவா, அத்தியாவசியப் பொருட்களுக்கு எந்தவகையில்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. உணவுப் பொருட்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மக்களுக்குக் கிடைக்கின்றனவா, உணவுப் பொருட்கள் சரியானபடி அளக்கவும், நிறுக்கவும்படுகின்றனவா, போன்ற விஷயங்களுடன் வணிகர்கள் கையாளும் இதரமோசடிகள் பற்றியும் இந்தச் சோதனைக் குழுக்கள் தகவல் அறிந்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

## நெடுஞ்செழியன் அமெரிக்கா செல்வார்

சென்னை, ஆகஸ்ட். 5

தமிழகக் கல்வி அமைச்சரும் தி.மு.க. பொதுச் செயலாளருமான திரு. நெடுஞ்செழியனுக்கு அமெரிக்க அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே திரு. நெடுஞ்செழியனை அமெரிக்காவுக்கு விஜயஞ் செய்யும்படி பல முறை அழைப்பு விடுக்கப் பட்டது.

இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் திரு. நெடுஞ்செழியன் அமெரிக்காவுக்குச் செல்லுவதற்கு முடிவுசெய்துள்ளார். செப்டம்பர் 3 வது வாரமளவில் அவர் அமெரிக்காவுக்குப் புறப்படுவார். திட்டமாக திகதி இன்னும் நிர்ணயஞ் செய்யப்படவில்லை.

மூன்றுவார காலம் அவர் அமெரிக்காவில் தங்கியிருப்பாரென்றும் அங்குள்ள கல்வி நிலையங்கள் சுகாதார நிலையங்களைப் பார்வையிடுவதே அவரது பிரயாணத்தின் நோக்கங்களில் முக்கியமானதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; வைத்தியத் துறையில் அமெரிக்காவின் முன்னேற்றத்துக்கு அடிப்படையென்பதைப் பற்றியெல்லாம் அவர் அறிவதற்கான விரிவான திட்டங்கள் தயா

# செய்திச் சுருக்கம்

### கட்டுப்பாடு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து முன்னர் வர்த்தக வங்கி கடன் வழங்கக்கூடாதுஎன மத்திய வங்கி விதித்திருந்த கட்டுப்பாடு மேலும் சிறிதுகாலத்திற்கு நீடிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

0 0 0

### ஆசிரியர் இடமாற்றம்

விஞ்ஞானத்தில் பயிற்சி பெற்ற ஆசிரிய தொழிற்சங்க பிரதிநிதிகளது ஆலோசனைக்கிணங்க வே விஞ்ஞான துறையில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களது இடமாற்றம் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

0 0 0

### மீண்டும் அமர்த்த வேண்டாம்

கூட்டுஸ்தாபனங்கள், அரசாங்க இலாகாக்கள் ஆகியவற்றில் பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கூடாது எனப் பிரதமர் சிறிமாவோ சகல அமைச்சுக்களுக்கும் உத்தரவுபிறப்பித்துள்ளார். கப்படுவதில்லை சம்பளமின்றியே அவர்கள் மேற்படிப் புக்குச் செல்ல வேண்டியுள்ளது.

0 0 0

### விசேட குழு 7-ம் திகதி கூடும்

வீடைமைப்பு அமைச்சரினால் அண்மையில் நியமிக்கப்பட்ட விசேட குழு கிராம, நகரப் புறங்களில் வீடமைப்புத் திட்டத்தினை நல்ல முறையில் அமுல் நடத்துவது பற்றி ஆராய இம் மாதம் 7-ம் திகதி வீடமைப்பு அமைச்சரது காரியாலயத்தில் கூடவிருக்கிறது இக்கூட்டத்திற்கு மேற்படி குழுவின் தலைவர் ஜனாப் எம். எஸ். ஆலிப் தலைமைவகிப்பார்.

0 0 0

### பௌத்தத்துக்கு முதலிடம்

சிறிமாவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பௌத்தமதத்திற்கு முக்கிய இடம் அளிக்குமென கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா பொலநறுவை பௌத்த வர்த்தக சங்கத்தினால் நிறுவப்பட்டிருக்கும் விடுதிக்கு அத்திபாரக்கல் நாட்டிவைத்துப்

## 'கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்திலிருப்பவர்கள்'

மட்டுவில், புதன்

"ஒரு சமுதாயத்தின் முது

"திரு வேலுப்பிள்ளை, தனது காலத்தில் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்திலிருப்பவர்கள்'

மட்டுவில், புதன்

''ஒரு சமுதாயத்தின் முதுகெலும்பாகவுள்ள இளம் சந்ததியினருக்கு, கல்வி, ஞானம் அறிவு, பண்பு, ஒழுக்கம் ஆகிய பண்புகளைப் போதித்து. அவர்களை நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஏற்றவர்களாக ஆக்கித்தரும் புனித தொண்டைச் செய்துவருபவர்கள் ஆசிரியர்கள் என்றதின் காரணமாகவே அவர்களை, கடவுளுக்கு அடுத்தபடியாக சமூகத்தில் மதிப்புக் கொடுத்து போற்றிவருகிறார்கள், இந்த மதிப்பை முழுமைபெறச் செய்த பெருமை தலைமை ஆசிரியர் திரு. க. வேலுப்பிள்ளைக்கே சாரும்.''

இவ்வாறு மட்டுவில் கந்தர் மகாவித்தியாலய அதிபர் திரு பொ சபாரத்தினம் மேற்படி மகாவித்தியாலய, கனிஷ்ட பகுதிக்கு தலைமையாசிரியராக இருந்து இளைப்பாறியதைத் தொடர்ந்து நடைபெற்ற பிரியாவிடை விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார். அதிபர் திரு. சபாரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

''திரு வேலுப்பிள்ளை, தனது காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரிய சேவையில் ஈடுபட்டு பெரும் தொண்டாற்றியுள்ளார். அவர் மட்டும் இந்த வித்தியாதனம் செய்யும் புனித தொண்டில் ஈடுபட்டிருக்கவில்லை. அவர் பரம்பரையில், சகலரும் ஆசிரியத் தொழிலில் தான் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

திருமதி பவளம் முத்தையா ஆசிரியை பேசுகையில், 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாக்கின்படி, திரு வேலுப்பிள்ளை தலைமை ஆசிரியர் தனது தொண்டைச் செய்ததின் மூலம் பெற்றார், மாணவர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளார் என்றார்.

அடுத்து பல ஆசிரியர்களும், மாணவ மாணவியர்களும், திரு. வேலுப்பிள்ளையின் சேவையை மெச்சிப் பேசினர். ஈற்றில் தேநீர் விருந்தும் மாணவ ஆசிரியர்களால் பரிசுகளும் அளிக்கப்பட்டு அவரை வீடுவரை அழைத்துச் சென்றுவிட்டு வந்தனர்.

## 'வாழ்க்கைக்கு உதவுவது இந்தக் கல்விதான்'

யாழ்ப்பாணம், வியா

''பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் வகுப்பறைகளில் பேராசிரியர்களிடம் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்குள் கல்வி கற்பதிலும் பார்க்க விளையாட்டுமைதானத்தில் சொற்பநேரத்தில் எல்லா விதமான கல்வியையும் கற்க முடிகிறது இக் கல்விதான் அன்றாட வாழ்க்கையில் அதிக பயன்தரக்கூடியதாக அமையும்''

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக வருடாந்தவிளையாட்டுப்போட்டிக்குப் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கலாநிதி கே. சுந்தரலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், மாணவர்கள் இல்லங்களாகப் பிரிவுபட்டுபோட்டியில் ஈடுபடும்போது ஒரு பிரிவு வெற்றிவாகை சூட வேண்டும் என்பதற்காக மறுபிரிவினர்விட்டுக்கொடுக்கிறார்கள் என்று கூறினார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய பல்கலைக்கழக அதிபர் திரு. சி. கந்தசாமி பேசும்போது, இவ் விளையாட்டுப்போட்டி கனிஷ்ட பல்கலைக்கழகத்தின் முதலாவதும், கடைசியுமான விளையாட்டுப்போட்டி என்று குறிப்பிட்டார்.

— —

இவ்வாரம்

## பேச்சுவார்த்தை முடிவடையும்

கோட்டை, செவ்

இவ்வருடத்துக்குத்தேவையான அரிசியைப் பெறுவது குறித்து சீனா, பர்மா ஆகிய நாடுகளோடு இலங்கை நடத்திவரும் பேச்சுவார்த்தை இந்தக்கிழமை முடிவடைகிறது.

வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் ஜயந்தா பி. கெலமே ஏற்கனவே சீனத் தூதுவரோடு பேச்சுவார்த்தை நிகழ்த்தியுள்ளார், இன்று பர்மியத் தூதரோடு பேச்சுவார்த்தை நடாத்துவார்.

## நிஜலிங்கப்பா 11 நாள் சாட்சியம்

சென்னை ஓகஸ்ட். 5

காளைச் சின்னம் யாருக்கு? என்ற பிரச்சினை சம்பந்தமாக சிண்டிக்கேட் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா 11 தினங்கள் விசாரிக்கப்பட்டார்.

டெல்லியில் தேர்தல்கமிஷனருக்கு முன்னால் திரு. நிஜலிங்கப்பா விசாரிக்கப்பட்டபோது இருதினங்கள் அவர் சாட்சியம் அளித்தார் மற்றைய 9 தினங்களிலும் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

இறுதிநாள் குறுக்குவிசாரணையின் போது அவர்தெரிவித்ததாவது:-

''கட்சியிலுள்ள அங்கத்தவர் தவறு புரிவாரானால் அவர்மீது நடவடிக்கை எடுக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. இதன் கட்சியின் கட்டுக்கோப்பை மீறியவர்களை கட்சியிலிருந்து விலக்கினேன் காங்கிரஸ் கட்சியின் பொருளாதார அரசியல் சமூகக் கொள்கைகளில் எனக்கும் பிரதமர் இந்திராகாந்திக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அது பிரதமரின் கொள்கை அல்ல மக்களுடைய கொள்கைகள் ஆகும்.

— —

## இரும்பாலைக்கு இந்திரா அடிக்கல் நாட்டுவார்

சேலம், ஆகஸ்ட் 5

சேலத்தில் தொடங்கவிருக்கும்இரும்பாலைக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அடிக்கல் நாட்டுவார்.

இத்தகவலை தமிழக முதமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்

மைசூர், ஆந்திரா முதலிய இடங்களில் இரும்பாலை தொடங்கும் வரை சேலத்தில் இரும்பாலை அமைக்கக் காத்திருக்க வேண்டியதில்லையென்றும் தெரிவித்த முதலமைச்சர் அடுத்த மாதம் சேலத்தில் இரும்பாலைக்கு அடிக்கல்லை இந்தியப் பிரதமர் நாட்டுவாரென்று உறுதியாகக் கூறினார்.

— —

## மீண்டும் வேலை!

யாழ்ப்பாணம், வியா

தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிஆசிரியர் திரு. அ பொ. செல்லையாவுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது. நான்குமாதத்துக்கு முன்னர் தற்காலிக வேலைநீக்கம்செய்யப்பட்ட இவர் வடபிராந்திய வித்தியாதிபதியின் உத்தரவைத்தொடர்ந்துநேற்று வேலைக்குச் சென்றார்.

'கத்தி...' என்று கூறப்படும் மெல்லிய குழாய் ஒன்றைப் புகுத்தித்தான் பெற வேண்டும் வேறுவழியில்லை.

நோயாளிகளுக்கு சோனார் முறைப்படி சோதனைகள் செய்து பார்த்ததில் நல்ல பலன்கள் கிடைத்தன.

## வலி இல்லை, செலவுகுறைவு

'வலிஇல்லாதது. எளியது; பத்திரமானது. இப்பொழுதுள்ளமுறைகளைவிடநோயாளிகளுக்குச் செலவுகுறைவானது இந்த 'ஸோனார்' முறை என்று கூறுகிறார் டாக்டர் டொனல்டு வி. ஹரிஸன். இவர்தான் தலைமை ஆராய்ச்சியாளர் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் இருதய இயல் துறைத் தலைவராகவும் துணைப்பேராசிரியராகவும் இருக்கிறார்.

இருதயநோய் இருப்பதாகக் கருதப்படும் நோயாளிகளைச் சோதிப்பதற்கும் மாரடைப்பு, இருதய அறுவைச் சிகிச்சை ஆகியவற்றிலிருந்து குணமடைந்துவரும் நோயாளிகள் எவ்வளவு வேகமாகக் குணமடைந்து வருகின்றனர் என்று துல்லியமாக அளவிடுவதற்கும் இந்தமுறையைப் பயன்படுத்தலாம்

இப்பொழுது கையாளப்படும் முறைகளைப்போல் அல்லாமல், ஒவ்வொருதடவை சுருங்கும்போதும் இருதயத்திலிருந்துஎவ்வளவு குருதி வெளியே பாய்ச்சப்படுகிறது என்பதை ஸோனார் துல்லியமாக அளவிடுகிறது. பின்புறமாகப் பாயும் குருதியையும் அளவிடுகிறது. இதனால் இருதயத்தின் அடைப்பிதழ் (வால்வு) கோளாறுற்றிருப்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

விண்வெளி விமானிகள் விண்வெளியில் பறக்கையில் அவர்களுடைய இருதயத் துடிப்பு, பணி முதலியவற்றை அறிய 'நாஸா' வுக்கு அக்கறை ஏற்பட்டதன்விளைவாகத் தோன்றியது இந்த மருத்துவ ஆராய்ச்சித் திட்டம். ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகம் இந்தத்துறையில் ஏற்கனவே பணியாற்றியுள்ளது.

இந்தமுறை இப்பொழுது பயன்மிக்கதுதான் என்று உறுதிசெய்யப்பட்டுள்ள படியால் விண்வெளிக் ப்பலில் எடுத்துச்செல்லக்கூடிய அளவுக்கு சின்னஞ்சிறு ஸோனார் கருவிகளை அமைக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும். விண்வெளியிலிருந்து அஞ்சலாகும் ஸோனார் தகவல்களைத் தொகுத்து வைப்பதற்கும், பின்னர் மீட்டு உடனுக்குடன் விளக்கம் கூறுவதற்கும் கம்பியூட்டர் பொறிகளைப் பயன்படுத்துவது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர்.

## ''புதிய பஸ்சேவையை ஆரம்பிக்கவும்''

உடுப்பிட்டி, புதன்

வல்வெட்டி, இலக்கணவத்தை, கம்பர்மலை, உடுப்பிட்டி நவிண்டில் ஆகிய பகுதிகளில் வசிக்கும் உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் இரவு மெயில் வண்டியில் பிரயாணம் செய்வதற்காகக் கொடிகாமம் புகையிரத நிலயத்திற்குச் செல்வதில் பெரும் கஷ்டம் அடைந்து வருகின்றனர்.

தற்பொழுது தொண்டமனாற்றிலிருந்து மாலை 4 மணிக்குப் புறபடும் தபால் சேவை பஸ் தான் இப்புகையிரதப் பிரயாணிகளுக்குத் தஞ்சமளித்து வருகின்றது. இந்தபஸ் இரண்டு மணித்தியாலங்களாக வடமராட்சிப் பகுதி முழுவதும் சுற்றிய பின்னரே கொடிகாமத்தைச் சென்றடையும் இதனால் பிரஸ்தாப பிரயாணிகள்சிரமமும்களைப்பும் அடைகின்றனர்.

இதனைத் தொடர்ந்து தொண்டமனாற்றிலிருந்து மாலை 6 மணிக்குப் புறப்பட்டு மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்கூடாகக் கொடிகாமம் சென்றடையக் கூடியதாக ஒரு பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பொது மக்கள் இ. போ. ச. மேலதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

— —

## 4வட்டாரங்களுக்கு இடைத்தேர்தல்

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் காலியான அங்கத்துவ இடங்களுக்கான இடைத்தேர்தல் நியமனப்பத்திரங்கள் பின்வரும் திகதிகளில் தாக்கலாகும். இம்மாதம் 10-ந் திகதி வட்டுக்கோட்டை கிராம சபை 3ம் வட்டாரத்திற்கும் அராலி கிராமசபை 6-ம் வட்டாரத்திற்கும் 12ந்திகதி காரைநகர் கிராம சபை 2ம் வட்டாரத்திற்கும் 14ந்திகதி பண்டத்தரிப்பு பட்டினசபை 3-ம்வட்டாரத்திற்கும் நியமனங்கள் தாக்கலாகும்.

தென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; வைத்தியத் துறையில் அமெரிக்காவின் முன்னேற்றத்துக்கு அடிப்படையென்பதைப் பற்றியெல்லாம் அவர் அறிவதற்கான விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படுகிறது.

— —

## சோதிடருக்கு பிரதமர் பாராட்டு

கிளிநொச்சி, புதன்

3 கட்சிகளைச் சேர்ந்த கூட்டு முன்னணி அரசாங்கம் இம்முறை ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் ஆகுவார் என்றும் தேர்தல் நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன்னரே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு பதிவுத் தபால் மூலம் அறிவித்திருந்த கிளிநொச்சியில் வசிக்கும் பிரபல சோதிடர் திரு. பி. எஸ். கே. ஜோதிப் பிரகாச சிற்பிரமணிய தேவரைப் பாராட்டி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமரின் ஆட்சிமன்றக் காரியதரிசி பிரதமர் சார்பில் திரு. ஜோதிப் பிரகாசருக்கு நன்றிக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

ஆத்மவேதாந்த கிரக மனோதத்துவ விதிப்படி கூட்டு முன்னணியின் வெற்றியைக் கணித்தனுப்பிய திரு. ஜோதிப் பிரகாச தேவர் தமிழ்நாடு, நெல்லை மாவட்டம் விளாத்திக்குளம் தாலுகாவைச் சேர்ந்தவர்.

.........

## 'ஆன்மசுத்தியுடன் தொண்டுசெய்க'

### உடுவில் எம். பி.

யாழ்ப்பாணம், புதன்

'கோவில்களின் அடிப்படை நோக்கங்கள் ஆன்மசுத்தியை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஆன்மசுத்தியுடன் கோவில்களின் தொண்டுகள்செயல்படவேண்டும்'

உடுவில் எம். பி. திரு வி தருமலிங்கம் சுன்னாகம் வருஷப்புலம் மாரியம்மன் கோவில் கட்டிட நிதிக்காக நடாத்தப்பட்ட சீட்டிழுப்பு வைபவத்தை நடாத்தி வைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு நபரான தயானந்த தேஹா முதல் பரிசு முன்னூறு ரூபா பெறுமதியுள்ள டிரான்சிஸ்டர் றேடியோவைப் பெற்றுக் கொண்டார் இரண்டாவது பரிசை மல்லாகம் வாசியான செல்வன் எஸ். அம்பிகைபாகன் பெற்றார்.

ஆகியவற்றில் பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கூடாது எனப் பிரதமர் சிறிமாவோ சகல அமைச்சுக்களுக்கும் உத்தரவுபிறப்பித்துள்ளார். இது குறித்து எல்லா அமைச்சுகளின் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகாக்கள், கூட்டுஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அதிபர்களுக்கும் உள்ளூராட்சி, பொது நிர்வாக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

0 0 0

## விசேஷ சலுகைகள்

கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன் மாமூத் அதிக நாட்கள் லீவு எடுக்காத ஆசிரியர்களுக்கு விசேஷ சலுகை வழங்குவதுகுறித்து ஆராய்ந்து. வருகிறார்.

கல்வியமைச்சு அதிகாரிகள் சிலர் இத்தகைய ஆசிரியர்களுக்கு அவர்களது மேற்படிப்புக்கு வேதனத்துடன் 2 வருட விடுமுறை வழங்கப்பட வேண்டுமென ஆலோசனை தெரிவித்துள்ளனர் தற்போது இத்தகைய வசதி ஆசிரியருக்கு வழங்

## 'குழந்தை இலக்கியம்'

யாழ்ப்பாணம், வியா

''இன்றைய சிறுவர்களே நாளைய பிரஜைகள். ஆகவே இவர்களுக்கு ஏற்ற தூய இலக்கியங்கள் சிறுவயதிலிருந்தே கற்பிக்கப்படல் வேண்டும். இல்லையேல், இவர்கள், தறிகெட்டு நெறிகெட்டுத் திசைமாறிவிடுவார்கள். இவர்கள் திசை மாறினால் நாடே திசைமாறிவிடும். எமது கலை, கலாச்சாரம், பண்பாடெல்லாம்நாசமாகிவிடும்'' என்று தென்புலோலியூர் அறிவகம் சனசமூகநிலையத்தின் 15வது ஆண்டு நிறைவு விழாவின் போது சிறப்புச் சொற்பொழிவாற்றிய கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை கூறினார்.

குழந்தை இலக்கியம் பற்றி உரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில், குழந்தைகளுக்கு, உரிய நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் மிகுந்த கவனஞ்செலுத்த வேண்டும் என்றும், இன்றைய இளைஞர்களைச் சீரழியச்செய்யும் கருவியாக, இழிந்த சஞ்சிகைகளும் நூல்களுமே அமைந்துள்ளன என்றும் வருத்தம் தெரிவித்தார்.

சன சமூக நிலையத்தின் தலைவர் திரு. சி. உருத்திரம் தலைமைதாங்கினார்.

சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா பொலநறுவை பௌத்த வர்த்தக சங்கத்தினால் நிறுவப்பட்டிருக்கும் விடுதிக்கு அத்திபாரக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

0 0 0

## செலவு குறைகின்றது

சமீப காலத்தில் வாழ்க்கைச் செலவு குறைந்து கொண்டு வருகிறது சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி கடந்த ஜூலை மாதத்தின் வாழ்க்கைச்செலவு புள்ளி 137.3 ஆகவிருந்தது. இது இதற்கு முன்னைய மாதத்திலும் பார்க்க 1.3 புள்ளி குறைவானதாக இருக்கிறது.

— —

## நினைவுதினம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபராக விளங்கிய சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனாரின் நினைவுதினம் வரும் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட விருக்கின்றது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவை சிவபாதசுந்தரனாரின்பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். பூசை சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

— —

நெடுந்தீவு, புதன்

தற்போதுஇருப்பதுபோல் குறிக்கப்பட்ட நேரங்களில் மட்டும் தந்தி அனுப்பும் முறையை மாற்றி எந்த நேரத்திலும் தந்தி அனுப்பவும் தொலைபேசி மூலம் பிறஇடங்களுடன்தொடர்பு கொள்ளவும் பொருத்தமான 'றேடியோலிங்' கை நெடுந்தீவிற்கு அமைத்துத் தரும்படி அரசாங்கத்தை கோருவதென்று நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது.

நெடுந்தீவு காரியாதிகாரி திரு. த. வேல்நம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு அனுபவம் வாய்ந்த ஒரு வைத்திய அதிகாரியையும் இரண்டு தாதிப் பெண்களையும் அனுப்பும் படியும் நெடுந்தீவு பஸ் சேவையை பல இடங்களுக்கும் விஸ்தரிக்கவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சிறுவயதிலேயே ஒருவருக்கு தெய்வநம்பிக்கை ஏற்படாவிட்டால், அவர் முற்றிலும் சுயநலமியாகவும், தமக்காகவே வாழவும் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடியவராகவும் ஆகிவிடக்கூடும். சின்ன வயதில் தெய்வபக்தி, நம்பிக்கை, அன்பு முதலிய உணர்ச்சிகள் ஏற்படுமாயின், அவர் வாழ்க்கையில் நேரிய நல்லவழியிலேயே செல்லக்கூடியதாகஇருக்கும்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National (Tamil) Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம்
21-ந் திகதி (6-8-70)


## தமிழில் உயர்தரக் கல்வி

விஞ்ஞானக் கல்வி கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப் படவிருக்கிறது. இதற்கான திட்டம் ஒன்றை கல்வி அமைச்சர் தயாரித்துள்ளார். பல்கலைக்கழகங்களிலும் விஞ்ஞானக் கல்வி சிங்களம், தமிழ் ஆகிய சுயமொழி மூலமே அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த கல்வி வருடத்திலிருந்து சுயமொழி மூலமே பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம் போதிக்கப்படுமென்று கல்விஅமைச்சர் அறிவித்திருக்கிறார். பல்கலைக்கழகங்களில் சுயமொழி மூலம் விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கப்படுவதாயின் கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் விஞ்ஞானக்கல்வி விஸ்தரிக்கப்படுவது நியாயமும் பயனுமுள்ளதாகும்.

பல்கலைக்கழகத்தில் தவிர இப்பொழுது பாடசாலைகளில் சகல பாடங்களும் சுயமொழிகளில்தான் போதிக்கப்படுகின்றது. உலகின் பல நாடுகளிலும் விஞ்ஞானக் கல்வி சுயமொழிகளில்தான் போதிக்கப்படுகின்றது. அந்த நாடுகள் விஞ்ஞானத்தில் வளர்ச்சியுமடைந்துள்ளன. சீனு, ஜப்பான் இதற்கு உதாரணம்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் சுயமொழிகளில் விஞ்ஞானக் கல்வி போதிப்பதில் சில சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆயினும் முயற்சி செய்தால் அது முடியாத காரியமல்ல. 38 ஆண்டுகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பணி புரிந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தமிழ் மூலம் விஞ்ஞானக்கல்வி அளிக்கமுடியும் என்று உறுதியாகக் கூறுகிறார் பல்கலைக்கழகத் [illegible]

வடஎழுத்துக்களையும் பயன்படுத்தல்வேண்டும்'' என்று கூறுகிறார்.

சில வாரங்களுக்கு முன் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் நடந்த கல்விக் கருத்தரங்கொன்றில் பேசிய கொழும்பு வடக்கு கல்வி அதிகாரி ஜனுப் எம். சி. எம். சலீத் கலை சொல்லாக்கம் பற்றித் தெரிவித்த கருத்துக்களையும் இங்கு எடுத்துக்காட்டுவது பயன்தரும். ''புவியியல் பாடங்களில் ஆங்கிலமூல உச்சரிப்புக்கே இயலுமான வரை இடமளிக்கவேண்டும். மூலப்பதங்களின் உச்சரிப்பு தனித்தமிழில் நடைமுறைப்படுத்தப்படும்போது மாறுபாடடைந்து மாணவர்களுக்குப் பெரும் பிரச்னைகளை உருவாக்கிவிடுகிறது. உதாரணமாக, சேர்மனி செகப்பிரியர், இலண்டன், உருசியா, உருமேனியா, தானியூப்பு போன்ற சொற்கள் பாடவிளக்கத்தில் மாணவர்களுக்கு மலைப்பையும் தெளிவின்மையையும் ஏற்படுத்தி விடுகின்றன. நேராக மாணவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்காத முறையில் சொற்களை அதே உச்சரிப்பில் எழுதுவதே நல்லது'' என்று ஜனுப் சலீத் தெரிவித்திருந்தார்.

சில தினங்களுக்கு முன் 'புரியும் தமிழ்' என்ற தலைப்பில் நாம் இதே பத்தியில் எழுதிய தலையங்கத்தில் அரசாங்க பிரசுரங்கள், வெளியீடுகள் தமிழில்மொழி பெயர்க்கப்படும் போது அவை மக்களுக்கு விளங்கக்கூடியதாக இலகுவான தமிழில் ஆக்கப்பட வேண்டுமெனச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அரசாங்க வெளியீடுகள், பிரசுரங்களைவிட கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் பாடங்களை அதுவும் விஞ்ஞான பாடங்களைப் புரிந்து கொள்வதற்கு இலகுவான

# 25 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த முதலாவது அணுப்பிரளயம்

**காட்டில் வாழ்ந்த அநாகரீக மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்ததற்கு சமானமாக, நாகரீக மனிதன் அணுசக்தியைக் கண்டுபிடித்தான். கண்ணுக்குப்புலப்படாத சின்னஞ்சிறு அணு மனிதனை ஆக்கவும்முடியும் அழிக்கவும் முடியும். இன்றைக்கு சரியாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு (6-8-45இல்) முதலாவது அணுகுண்டு ஹிரோஷிமா என்ற ஜப்பானிய நகரின் மீது வீசப்பட்டது. அதன் அழிவுச் சக்தியைக் கண்டு அதைத் தோற்றுவித்தவர்களே ஆச்சரியப்பட்டனர்.**

இரண்டாவது உலகமகாயுத்தம் அநேகமாக முடிவடையும் கட்டம். ஐரோப்பாவில் ஹிட்லரின் ஜெர்மனி குற்றுயிராக அடிபணியும் தறுவாயிலிருந்தது பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க படைகள் மெல்ல மெல்லவாக முன்னேறிவந்து யப்பான்தீவுகளை நெருங்கிவிட்டன. 1945ம்ஆண்டு நவம்பர் மாதம் ஜப்பானிய பீடபூமி மீது படையெடுப்பதற்கு ஆயிரக்கணக்கான போர்க் கப்பல்களும் விமானங்களும் லட்சக்கணக்கான போர்வீரர்களும் தயாராகிக்கொண்டிருந்தனர். அந்தப்படையெடுப்பு நடக்கவேயில்லை.

ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ உட்பட பிரதம மந்திரியும் வெளிநாட்டு மந்திரியும் வேறு அரசியல் தலைவர்களும் இனிமேல் போராடி வெற்றி பெறுவது முடியாதகாரியம் என்றெண்ணி நடுநிலைமை நாடுகள் மூலமாக சமாதானப்பேச்சுவார்த்தைகள் நடத்த ஆயத்தமாயிருந்தனர். ஆனல் ஜப்பானிய இராணுவத் தலைவர்களும் கடற்படைத்தலைவர்களும் சமாதானத்துக்கிணங்க பிடிவாதமாக மறுத்துவிட்டனர்.

இதற்கிடையில் நேசநாடுகள் போட்ஸ்டாமில் கூடி ஜூலை மாதம் 26-ந் திகதி புகழ்பெற்ற போட்ஸ்டாம் பிரகடனத்தைவெளிப்படுத்தின ஜப்பான் உடனே யுத்தத்தை நிறுத்தவேண்டும், ஆனல் அதன் எதிர்காலஅரசாங்கம் ஜப்பானிய மக்களின்விருப்பப்படியே அமைக்கப்படும் என்று அப்பிரகடனத்தில் சோவியத்யூனியனின் அங்கீகாரத்தோடு அமெரிக்காவும் பிரிட்டனும் சீனுவும் கைச்சாத்திட்டன.

அதே தினத்தில் ஜப்பான் இதை ஏற்றுக்கொள்ளத் தவறினல் ஜப்பான்மீது அணுகுண்டு பிரயோகம்செய்வது என்றகட்டளையில் அமெரிக்க ஜனதிபதி ட்ரூமன் கையெழுத்திட்டார். இம்முடிவு பலவிதமான பேச்சு [illegible]

இதற்கு ஆறு வருடங்களுக்கு முன்னரேயே அமெரிக்க, பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் ஜேர்மனியிலிருந்து ஹிட்லரால் விரட்டப்பட்ட நிபுணர்களும் நியூயோர்க் நகரத்தில் கூடி அணுவைப்பிளக்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தனர். ஜூலை மாதம் 16-ம் திகதி அமெரிக்காவிலுள்ள நியூ மெக்ஸிக்கோ என்னும் வனந்தரப் பிரதேசத்தில் 20,000தொன் டைனமைட்டுக்கு சமானமான சக்தியுள்ள ஓர் அணுகுண்டு பரிசீலனை செய்யப்பட்டது. விஞ்ஞானிகள் பூரண திருப்தி தெரிவித்தனர். இதற்கு முன்பு ஒருபோதும் கண்டிராத ஒரு மகாகொடிய அழிவுச்சக்தி மனிதனுடைய கைக்கு எட்டிவிட்டது.

இந்த செய்தி பிற உலகத்தவருக்கு பிரதானமாக ஜப்பானியருக்குத்தெரியவே தெரியாது போட்ஸ்டாம் எச்சரிக்கையை ஜப்பான் மதிக்கவில்லை. தொடர்ந்து போர் செய்த வண்ணமிருந்தது.

ஆகஸ்ட் மாதம் ஆறுந் திகதியும் நெருங்கியது.

ஜப்பானிய பீடபூமியிலிருந்து 600 மைல்களுக்கப்பால் பசுபிக் சமுத்திரத்திலிருந்த சின்னஞ்சிறு தினியன் தீவில்தான் அணுகுண்டை வீசப் போகும் அமெரிக்க விமானங்கள் தங்கியிருந்தன கேணல் டிபெட்ஸ் என்பவரின் தலைமையில் ஆக ஏழு பி-29 விமானங்களே இத்தீவில் இருந்தன. ஏப்பிரல் மாதம் தொடக்கம் அங்கே குண்டு வீச்சு பரீட்சைகள் நடந்துவந்தன

ஹீரோஷிமா அமெரிக்க விமானங்களால் அதிகம் சேதப்படுத்தப்படாத ஒரு பெரிய கைத்தொழில் நகரம் கடந்த சில மாதங்களாக தனித்தனியாக அமெரிக்க விமானங்கள் அதன் மீது பறந்து செல்வதும், எப்பவாவது ஒரே ஒரு குண்டு [illegible] ஹிரோஷிமா [illegible] ஒரு நன்றாகப் பழக்கமாகி விட்டது.

உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. அது சீதோஷ்ண நிலை பரிசோதிக்கும் ஒரு வேவு விமானம் இதிலிருந்து எல்லாம் திருப்தி, குண்டு போடலாம் என்ற செய்தி பின்னல் வந்துகொண்டிருந்த கேணல் டிபெட்சின் அணு குண்டு விமானத்துக்கு ரேடியோ மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதைக்கேட்டதும்கேணல் டிபெட்ஸ் தமது சகா விமானிகளுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார். 'இப்பொழுது முதல் எல்லோரும் மிக கவனமாக இருங்கள். முதல் முதலாக அணுகுண்டு ஒன்றை வீசப் போகிறோம்' மற்ற விமானிகளுக்கு அப்பொழுதான் இரகசியம் துலக்கமாயிற்று

காலை 8-10 அளவில் ஹிரோஷிமா நகரம் தென்பட்டது. குண்டு வீசுபவர் குறிபார்த்தார். 8-15க்கு இலக்கின் மேல் 31,000 அடி உயரத்தில் விமானம் பறந்தது அடுத்த கணம் உலக சரித்திரப் போக்கையே மாற்றிவிட்ட முதலாவது அணுகுண்டு ஹிரோஷிமாவை நோக்கி விரைந்தது. அதேசமயம் கேணல்டிபெட்ஸ் தமது விமானத்தை ஒரு வெட்டு வெட்டித் திருப்பி, அணுக்கதிர்களிலிருந்து தப்பி பின்புறமாகச்செலுத்தினர்.

தரைக்கு 1850அடி உயரத்தில் குண்டு வெடித்தது. கோடி சூரியப்பிரகாசத்தில் தேசம் பூமியெல்லாம் மூழ்கியது ஹிரோஷிமா நொடிப்பொழுதில் தரைமட்டமாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மனிதர் நின்றநின்ற இடத்தில் எரிந்து சாம்பராகினர், மேலும் ஆயிரக்கணக்கானோர் நொருங்கும் சட்டடங்களில்அகப்பட்டும், பறக்கும் இரும்புகள் கற்களால் தாக்கப்பட்டும் மாண்டனர். அணுக்கதிர் தாக்கத்தால் பல மாதங்களாக தொடர்ந்து செத்துக்கொண்டிருந்தவர்கள் இன்னும் பலர்.

அந்த ஒரு கணத்தில் மட்டும் 70,000 பேர் மாண்டார்கள் ஆகஸ்ட் ஆறுந் திகதி முதலாவது அணுகுண்டு வீசப்பட்டது, ஆகஸ்ட் 15ம் திகதி ஜப்பான் நிபந்தனையற்ற சம்பூரண சரணகதி அடைந்தது.

—வழிப்போக்கன்

## ஜெயராஜன் எழுதுவது

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவை சென்னைக்கு வரவேண்டுமென்று கேட்டு ஓர் அன்பழைப்பு கிடைக்க இருப்பதாக, ஒரு கொழும்புப் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. சென்னையிலே மகாபோதி சங்கத்தார் ஒரு புதிய கட்டடம் கட்டியுள்ளனராம். அதன் திறப்பு விழாவுக்கு இலங்கைப் பிரதமரை வருமாறு அழைக்க அச்சங்கம் தீர்மானித்துள்ளதாகவும், இதை ஏற்று அவர் தமிழகம் வருவதாயின் அவருக்கு நல்ல வரவேற்புஅளிக்க முதல்அமைச்சர் கருணநிதி ஒழுங்குசெய்வாரென்றும் அச்செய்தி தெரிவிக்கிறது. இது உண்மையாயின். இலங்கைப்பிரதமர் ஸ்ரீமா இதைத்தயங்காமல், 'துணிச்சலுடன்' ஒப்புக்கொள்ளவேண்டும்.

தமிழகத்திலிருந்து இலங்கைப்பிரதமர்கள் யாருக்கும் இதுவரை அழைப்பு எதுவும் கிடைத்ததாகத்தெரியவில்லை அப்படி கிடைத்திருப்பினும், இலங்கைப் பிரதமர்கள் அதை ஒப்புக்கொண்டு தமிழகம் சென்றிருப்பார்களா என்பது சந்தேகம் ஏனெனில் தமிழகத்தவரை இலங்கையின் 'விரோதிகள்' என்றஅரசியல் பிரசாரங்கள் பலவிதங்களிலும் நடந்துள்ளன நடந்தும் வருகின்றன.

இதுவரை அப்படியிருப்பினும், இனி அண்டையிலுள்ள தமிழகத்துக்கும் இலங்கைக்கும் நெருங்கிய நல்லுறவும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டியதை யாரும் மறுக்கமுடியாது. கள்ளக்குடியேற்றம். கள்ளக்கடத்தல் இவற்றைத் தடுக்க தமிழக அதிகாரிகளுடன் இலங்கை பயனுள்ள முறையில் பேச்சுகளைநடத்தி வருகின்றது. மேலும் ஆக்க முறையில் குடிசைக் கைத்தொழில், வர்த்தகம் முதலியவற்றில் தமிழகத்தின் உதவி இலங்கைக்குப் பலவிதங்களிலும் பயன்படக்கூடும்.

இலங்கையிலே இச்சமயம் பிரதமர் ஸ்ரீமாவுக்கு முக்கிய வேலைகள் இருக்கலாம் என்றாலும் சென்னையின் இந்த அழைப்பை அவர்ஏற்று, தமிழகத்தில் சில நாட்களாவது சுற்றுப்பிரயாணம் செய்வதாயின், பலதப்பெண்ணங்கள் நீங்கவும், இரு நாடுகளுக்கும் நல்லுறவு பலப்படவும் முடியும்.

இதற்கு முன்இருந்த இலங்கைப் பிரதமர்களுக்கு போதிய பார்லிமெண்ட் பலம் இல்லாதிருந்ததால் அவர்கள் பக்கத்திலுள்ள தமிழகத்துக்குச் செல்லத் தயங்கி இருக்கலாம் எதிர்க்கட்சியினர் தங்கள் மீது குற்றம் சுமத்துவரென்று அஞ்சியிருக்கலாம். ஆனல் பிரதமர் ஸ்ரீமாவுக்கு அவ்வித அச்சம் இச்சமயம் இருக்கக் காரணமில்லை. அவருக்கு அசைக்கமுடியாத அமோகமானபலம் பார்லிமெண்டில் உள்ளது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த யாரும் விஷமப்பிரசாரம் செய்வரோ, அதனல் தமது பதவிக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அவர் அஞ்சத்தேவையில்லை. இந்த அழைப்பை அவர் துணிச்சலுடன் ஒப்புக்கொள்வதால், அவருக்கு மேலும் பல வெற்றிகள் காத்திருக்கும்

0 0 0

பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு முருகபக்தி அதிகமுண்டு. தமிழகத்திலே ஆறுபடைவீடுகளின் மகிமைகளையும் அவருக்கு முன்கூட்டியே எடுத்துச்சொல்லி விளக்கினல் அந்த ஸ்தலங்களுக்கும் அவர் சென்று தரிசிக்கவிரும்பக்கூடும். டட்லி பிரதமராக இருக்கையில், வட இந்திய பௌத்தஸ்தலங்களுக்கு மட்டுமே சென்றார். அவர் தமிழகத்துக்குச் செல்லாதது [illegible]

# தீவுப்பகுதியில் நாளை கொடியேறும் இரு ஆலயங்கள்

## புங்குடுதீவு முத்துமாரி அம்பாள்

புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 15-ந் திகதி ரதோற்சவத்துடனும் மறுநாள் தீர்த்தோற்சவத்துடனும் விழா முடிவடையும்

'பூவிலுயர் வள[..]வு
புங்கைநகர் மானெழுவம்
பொலிந்த செந்நெல்
கோவில்வயல் எழுந்த
[..]ருளிக் குலமுறையா
லெலை[..]ாண்டு
கொ[..]டுத்த

கரிக்கும் இவ்வாலயத்தின் 550 இருத்தல் எடையுள்ள அசையாமணி எழுப்பும் நாதம் நாலுதிக்கிலும் மக்களின் செவிகளில் தேவியின் அருண்மொழித் தேனெனப் பாய்கிறது. இன்று புங்குடுதீவில் உள்வீதிக்கொட்டகை முற்றுகப்போடப்பட்டுப் பூரணத்துவமடைந்துள்ள ஒரேயொரு ஆலயமாக விளங்கும் ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலயம் பல்வகை இயற்கை வனப்பும்பொருந்தப்பெற்றது.

இவ்வாலயத்தை இன்றைய நிலைக்குக்கொண்டுவரப்பெரிதும் உதவிபுரிந்த சைவாபிமானிகளுக்கும் விசேடமாக நீண்டகாலம் பரிபாலன சபையின் தலைவராயிருந்து அருந்தொண் [illegible]

துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டு, பெட்டியைத் தூக்கிச் சென்றனர். ஓரிடத்தில் களைப்பாறுவதற்காகப் பெட்டியை வைத்துவிட்டு, மீண்டும் அப்பெட்டியைத் தூக்க முயன்றபோது பெட்டியை அசைக்கமுடியாமல் இருப்பது கண்டு அவர்கள் ஏங்கினர். அங்கு நின்றவர்கள் எல்லாம் இச்செய்தியை ஊர் மக்களுக்கு தெரிவித்து நூற்றுக்கணக்கான மக்களை அங்கு வரவழைத்தனர். ஆனல் எத்தனைபேர் கூடியும் அப்பெட்டியை அவ்விடதிதிலிருந்து அசைக்கவே முடியவில்லை. இது, திருவருட் திறன் என்பதை உணர்ந்துகொண்ட மக்கள் அப்பெட்டியைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் நினைத்தபடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் கல்விப்பணி புரிந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஆ வி மயில்வாகனம் தமிழ் மூலம் விஞ்ஞானக்கல்வி அளிக்கமுடியும் என்று உறுதியாகக் கூறுகிருர் பல்கலைக்கழகத்திலுள்ள மற்றும் சிலரும் சுயபாஷைகள் மூலம் விஞ்ஞானக் கல்வி அளிக்க முடியுமென்று கூறுகின்றனர்.

விஞ்ஞானக் கல்வியைத் தமிழில் போதிக்கும் பொழுது ஆங்கிலத்திலுள்ள கலைச் சொற்களைத் தமிழாக்கஞ்செய்ய வேண்டியுள்ளது தமிழில் ஆக்கும் கலைச் சொற்கள் மாணவர்களுக்கு விளங்கக்கூடியதாக சுலபமானமுறையிலிருக்க வேண்டியது அவசியம். ஆங்கிலச் சொற்களுக்குத் தனித்தமிழ் ஆக்குவது பெரிய சாதனை தான் இந்தச் சாதனை மாணவர்களைக் கஷ்டத்தில் ஆழ்த்துவதுடன் விஞ்ஞானக்கல்வியில் அவர்களைப் பின்தங்கிநிற்கவே உதவி செய்வதாக இருக்கும். கலைச்சொல்லாக்கம் சம்பந்தமாக பேராசிரியர் மயில்வாகனம் அபிப்பிராயம் தெரிவிக்கையில், "கலைச் சொல்லாக்க விஷயத்தில் இலக்கணத்தின் பிடியைச் சற்றுத் தளர்த்தியே ஆக வேண்டும். கல்விப்பொதுத் தராதரப்பத்திர சாதாரண வகுப்புவரை, சாதாரணமாக வழக்கத்திலுள்ள இலகுவான சொற்களை விஞ்ஞானப் பாடங்களில் பயன்படுத்தலாம். இதன்பின்னர் ஆங்கிலக் கலைச்சொற்களை, ஓசைகெடாமல் அப்படியே தமிழில் எழுத்து மாற்றம் செய்து பயன்படுத்தல் நலன் தரும். இதன் மூலம் மாணவர்கள் ஆங்கில நூல்களையும் வேண்டும்போது பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்படும்' ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கும்போது கண்டபடி ஓசைமாற்றம் செய்யக் கூடாது வேண்டும்போது

... சுட்டிக் காட்டியிருந்தோம்.

அரசாங்க வெளியீடுகள், பிரசுரங்களைவிட கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் பாடங்களை அதுவும் விஞ்ஞான பாடங்களைப் புரிந்து கொள்வதற்கு இலகுவான தமிழ் அவசியம். கலைச் சொற்களை - ஆங்கிலச்சொற்களை எழுத்து மாற்றம்செய்வது இதைவிட விசேஷம். ஆங்கிலம் பல துறையிலும் வளம்பெற்றிருப்பதற்கு அது பிறமொழிச் சொற்களையும் தனதாக்கிக் கொண்டுள்ளது முக்கியகாரணம். சிங்கள மொழியும் பிறமொழிச் சொற்கள் பலவற்றைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது.

பல்கலைக்கழகத்தில் சுயமொழிகள் மூலம் விஞ்ஞான பாடங்கள் போதிக்கப்படும்பொழுது, சிங்கள மாணவர்கள் ஆங்கிலக் கலைச் சொற்களைச் சிங்களத்தில் எழுத்து மாற்றம் (Trans literation) செய்து பயன்படுத்த தமிழ் மாணவர்கள் புதிதாகத் தமிழில் கண்டுபிடித்த சொற்களை வைத்துக் கொண்டு திணற தமிழ் மாணவர்களின் நிலை என்னவாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

தமிழாக்கத்திலகூட நமக்கெனத் தனித்துவம்வேண்டுமென்ற கருத்துக் காரணமாக, தமிழ்நாட்டிலும் இதர தமிழ்பேசும் நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டுவரும், பழகிப்போன சொற்களை விடுத்து 'கையொற்று', 'செவ்வி' என்பனபோன்ற புரியாத கடினமான சொற்களைத் தேடிக்கண்டுபிடித்துப் பயன்படுத்த முனைகின்றோம். சுலபமாக விளங்கிக்கொள்ளக் கூடிய சொற்களையும் பதங்களையும் விடுத்து கடினமானவைகளை எதற்காகத் தோண்டியெடுக்க வேண்டும்?

தமிழாக்கமும் கலைச்சொல்லாக்கமும் தமிழ் மக்களுக்கு மாணவர்களுக்குத் தான் என்பதை மறந்துவிடலாகாது

# 25 வருட கி. ச. தலைவர்

வங்காலைக் கிராமசபைத் தலைவராகவும் அங்கத்தவராகவும் தொடர்ந்து 25 வருடங்களாகக் கடமையாற்றிய திரு. எஸ். ஜோன் மாக்கினின் 25 வருடகால சேவையைப் பாராட்டி விழாக்கொண்டாட மேற்படி கிராமசபை தீர்மானித்துள்ளது.

திரு. ஜோன்மாக் வங்காலைக் கிராமத்துக்குமட்டுமன்றி மன்னூர் மாவட்டத்திலுள்ள சகல கிராமசபைத் தலைவர்கள் சங்கத்தின் தலைவராக 18 ஆண்டுகள் இருந்து மன்னூர் மாவட்டம் முழுவதிற்குமே சிறந்த சேவையாற்றியுள்ளார்.

அகில இலங்கை கிராம சபைத் தலைவர்கள் சங்கத்தின் தலைவராக காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இருந்த காலத்தில் திரு. ஜோன் மாக் அச்சங்கத்தின் உப தலைவராகக் கடமையாற்றினுர். மன்னூரில் இவர் செய்த வேலைகளைக் கண்கூடாகக் கண்ட திரு பண்டாரநாயக்கா இவரை 'மன்னூரின் ஒளி, எனப் பாராட்டிக் கூறினுர்.

வங்காலைக் கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளான மின்சாரம், தண்ணீர் விநியோகம், வீதியமைப்புக்கள் முதலியவற்றைப் பொறுப்பேற்று திருப்திகரமாகவும் சிறப்பாகவும் செய்து முடித்துள்ளார்.

மன்னூர் மாவட்ட கிராம சபைகளின் நிர்வாக அறிக்கையைச் சமர்ப்பித்த முதல் கிராமசபைத் தலைவர் என்ற பெருமையும் திரு. ஜோனுக்கே உரியது

ஆயுள்வேத வைத்தியரான திரு. ஜோன் தனது சிறந்த வைத்திய சேவையினுலும் மன்னூர் மக்களின் பெரும் மதிப்புக்குள்ளானவர். இன, மத, அரசியல் வேறுபாடின்றிச் சேவையாற்றும் இவர் அகில இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் உப-தலைவராக கடந்த 14 வருடகாலமாகக் கடமையாற்றி வருகிருர். மேலும் இவர் மன்னூர் மாவட்டத்திலுள்ள 30 சமூக சேவை நிறுவனங்களின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகிருர்.

—மன்னூர் வாசி

இதை ஏற்றுக்கொள்ளத் தவறினுல் ஜப்பான்மீது அணுகுண்டு பிரயோகம்செய்வது என்றகட்டளையில் அமெரிக்க ஜனுதிபதி ட்ராமன் கையெழுத்திட்டார். இம்முடிவு பலவிதமான பேச்சுவார்த்தைகள், விவாதங்கள், எதிர்ப்புகளுக்குப் பின்னரே எடுக்கப்பட்டது. சேர்ச்சிலும் ட்றூமனும் யுத்தத்தை விரைவில் முடித்து விடுவதற்கு அணுகுண்டு பிரயோகம் அவசியமானது தான் என்ற கசப்பான முடிவுக்கு வந்தனர்

தனித்தனியாக அமெரிக்க விமானங்கள் அதன் மீது பறந்து செல்வதும், எப்பவாவது ஒரே ஒரு குண்டு மட்டும் வீசப்படுவதும் ஹிரோஷிமா நகர வாசிகளுக்கு நன்ருகப் பழக்கமாகிவிட்டது.

ஆகஸ்ட் ஆருந்திகதி காலை ஏழு மணி பத்து நிமிடமளவில் அபாயச்சங்கு ஊதப்பட்டபோது பலர் அதையிட்டு அதிகம் கவலைப்படவில்லை. தத்தம் வேலைகளை கவனித்துக் கொண்டே இருந்தனர் ஒரு பி-29 விமானம் கண்ணுக்கெட்டாத

# இன்று கிறிஸ்து மறுரூபமான திருநாள்

(கிறீஸ்துநாதர் தபோர் மலையில் மறுரூபமான திருநாளை இன்று திருச்சபை கொண்டாடுகிறது.)

கிறீஸ்துநாதர் தம் சீடரில் முக்கியமானவர்கள் எனக் கருதப்பட்ட இராயப்பர், யாகப்பர், அருளப்பர் ஆகிய மூவரையும் அழைத்துக்கொண்டு தபோர் என்னும் மலைக்குச் சென்ருர் தம் சீடரை மலை அடிவாரத்தில் இருக்கவிட்டு தாம் ஜெபிப்பதற்காக மலையில் ஏறி அங்கே ஜெபம் செய்தார். அப்போது அவர் முகம் மாறி பிரகாசமாய்த்து லங்கியது. அவரின் ஆடைகளும் வெண்மையாய்ப் பிரகாசித்தன அல்லாமலும் அவர் மற்றும் இருவருடன் சம்பாஷிப்பவராகவும் காணப்பட்டார். பழைய ஏற்பாட்டில் வேதப் பிரமாணங்களின் தந்தை எனப் போற்றப்பட்ட மோயீசனும் தீர்க்கதரிசிகளில் ஒருவரான எலியாசும் அவருடன் பேசிக் கொண்டிருப்பதாகவும் காணப்பட்டனர். இக்காட்சியைக் கண்டு பிரமிப்படைந்திருந்த சீடர்களில் ஒருவரான இராயபபர், என்ன செய்வதென்று அறியாது 'ஆண்டவரே நாம் இங்கே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோயீசனுக்கு ஒன்றும் எலியாசுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்' என்ருர்

அப்போது இந்தக் காட்சி அவர்களுக்கு மறைந்து போகத் தக்கதாக ஒரு மேகம் வந்து மோயீசனையும் எலியாசையும் மறைத்தது கிறீஸ்துநாதர் தனியே காணப்பட்டார். அல்லாமலும் வானத்திலிருந்து ஓர் அசரீரி உண்டாகி 'இவரே நமது நேசகுமாரன். இவர் பேரில் நாம் பிரியமாயிருக்கிறேம்' என்று சொல்லிற்று கிறீஸ்து நாதர் மலையிலிருந்துஇறங்கி வந்து பயந்திருந்த தம் சீடரைத் தேற்றினுர்.

—இ. பேர்னுட்

## படகுச் சேவை

யாழ்ப்பாணம், புதன்

தீவுப்பதி படகுசேவை நேரங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. காலை 6-30 மணிக்கு அனலைதீவிலிருந்து புறப்படும் படகு 7-00 மணிக்கு எழுவைதீவுவையும் 7-45 மணிக்கு ஊர்காவற்றுறையையும் போய்ச் சேரும் காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து படகு புறப்பட்டு 8-30 மணிக்கு எழுவைதீவுவையும் 9-15 மணிக்கு அனலைதீவையும் 9-45 மணிக்கு நயினுதீவையும் போய்ச்சேரும்.

மாலை 1-15 மணிக்கு நயினுதீவிலிருந்துபுறப்பட்டு 1-45 மணிக்கு அனலைதீவுக்கும், 2-05 மணிக்கு எழுவைதீவுக்கும், 2-45 மணிக்கு ஊர்காவற்றுறைக்கும் போய்ச்சேரும் பின்னர் 4 மணிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து புறப்படும்.

'பூவிலுயர் வள[illegible]வு
புங்கைநகர் மானெழுவம்
பொலிந்த செந்நெல்
கோவில்வயல் எழுந்த
ருளிக் குலமுறையா
லெ[illegible]ாண்டு
கொ[illegible]டுபூத்த
காவிமலர ஊயதிரு
கட்கடையின் உலக
மெலாங் களிக்க காக்கும்
தேவிமகா மாரியிரு
செம்பதுமைத் துணைப்
பதங்கள் சிந்தை
செய்வாம்'

-பேராசிரியர் சி, இ. சதாசிவம்

ஈழவள நாட்டின் வடபால் அமைந்த சப்ததீவுகளுள் பல்வளமும் மிக்கு விளங்கும் புங்குடுதீவு 1954-ம் ஆண்டு கண்ணகிக்குப் பெருவிழா எடுத்துப் பெருமை பெற்றது 1967-ம் ஆண்டு திருப்பெருகு சைவ மகாநாடு நடாத்தி 'சிவஞானத் தமிழ் மல'ரும் வெளியிட்டது. சைவமும் தமிழும் முழுமை பெற்று விளங்கும் இச்சிறு தீவின் மூன்ரும் வட்டாரத்திலுள்ள மானெழுவம் என்னும்குறிச்சியில் 'கோயில்வயல்' என்னும் திருத்தலத்தின் கண்ணே எழுந்தருளியுள்ள ஸ்ரீமுத்துமாரியம்பாள் இற்றைக்கு சுமார் நூற்ருண்டுகளுக்கு முன் ஒரு சிறு கொட்டிலில் கோவில் கொண்டிருந்தாள்

ஸ்ரீமுத்துமாரியம்பாள் காட்டியுள்ள அற்புதங்கள் பலப்பல, மிக அண்மையில் நடந்த ஒன்று கடந்த உற்சவ காலத்திலும் இவ்வாண்டுபோல் பத்து நாட்களும் சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஒருநாள் பேசவிருந்த அன்பர் தவிர்க்க முடியாத காரணத்தினுல் பேச முடியவில்லை. என்னே அதிசயம். அம்பாள் அந்த அன்பரின் கனவிற்ருேன்றி அவரை முகையாக்கிப் பின் பேசவைத்த உண்மையை அவ்வன்பர் மற்றொருநாள் சொற்பொழிவில் எடுத்துக் கூறியது கேட்டுக்கொண்டிருந்த அடியார்கள் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

அம்பாளின் அற்புதங்கள் பலவற்றைக் கண்டும் கேட்டும் அறிந்த சைவாபிமானிகள் பலரின் அயராமுயற்சியால் அம்பாள் ஆலயம் உருவாகி அவ்வப்போது குடமுழுக்கும் ஆகியது. 1947-ம் ஆண்டு சொந்த முகாமையிலிருந்து பொதுப்பரிபாலன சபையாரிடம் நிர்வாகம் கைமாறியதிலிருந்து அம்பாள் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியுற்றது. கடந்த இரண்டு ஆண்டுகளிலேயே சுமார் அறுபதினுயிரம் ரூபாய்க்குத்திருப்பணிவேலைகள் நடைபெற்றுள்ளன. வெள்ளிக்கொடிமரம் அலங்

இவ்வாலயத்தை இன்றைய நிலைக்குக்கொண்டுவரப்பெரிதும் உதவிபுரிந்த சைவாபிமானிகளுக்கும் விசேடமாக நீண்டகாலம் பரிபாலன சபையின் தலைவராயிருந்து அருந்தொண்டாற்றி மறைந்த திருவில்வரத்தினத்திற்கும்சைவ உலகம் என்றும் கடப்பாடுடையது. மற்றெல்லாத் திருப்பணிகளும்முடிவடைந்துள்ள இன்று எஞ்சியுள்ள ஒரேயோருதிருப்பணிஇராசகோபுரமே அதனையும் முடித்துவைக்க எல்லாம் வல்ல எம்பெருமாட்டி திருவருள்கூட்டுவாளாக.

—அடியான்

# அனலைதீவு ஐயனுர் ஆலயம்

ஏழு தீவுகளில் நீர்வளம், நிலவளங்களால் மேம்புற்று விளங்கும் அனலைதீவு, 12 சதுரமைல் விஸ்தீரணமுடையது. வேறெம் மதமுமின்றிச் சைவசமயிகளையே கொண்டுள்ள அனலைதீவு, ஏழு சைவ ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றில் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் அமைந்ததும், சரித்திரப் பிரசித்திபெற்றதுமான ஆலயம் நயினுகுளத்தில் எழுந்தருளியிருக்கும் ஹரிஹர புத்திர ஐயனுர் ஆலயமாகும். இவ்வாலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஹரிஹர புத்திர ஐயனுர் செய்த அற்புதங்கள் பலவற்றையும் இப்பகுதி மக்கள் என்றென்றும் மனதிற்கொண்டு குறைவந்தபொழுதெல்லாம் அரசனிடம் ஓடும் குடிமக்கள் போல, இவ்வூர் மக்களும் தாம் காணும் துன்பங்களுக்குப் பரிகாரம் காணும்வகையில் இவ்வாலயத்தை அணுகி, ஐயனுரிடம் தத்தம் குறைகளை முறையிடுவது வழமையாகிவிட்டது. அனலைதீவு மக்கள் எக்குறை வரினும் 'ஐயனுரே காப்பாற்று' என்ற கோஷத்தையே முதல் எழுப்புவர். இவ்வாருக ஐயனுரைத் தமது குலதெய்வமாக இவ்வூர் மக்கள் போற்றிப் பேணி, வருடாவருடம் சிறப்பாக விழாவும் எடுத்து வருகின்றனர்.

## ஆலய வரலாறு

இத்தீவின் மேற்குச் சமுத்திரக் கரையில், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு அழகு பொருந்திய பெட்டி ஒன்று அடைக்கப்பட்டுக் கரையேறியது. இதைக் கண்ட இவ்வூர் மக்கள் ஒன்றுசேர்ந்து இப்பெட்டியை எடுத்தும் அப்பெட்டியை அவ்விடத்திலிருந்து அசைக்கவே முடியவில்லை. இது, திருவருட் திறன் என்பதை உணர்ந்துகொண்ட மக்கள் அப்பெட்டியைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் நினைத்தபடியே பெட்டியினுள் ஹரிஹர புத்திர ஐயனுரின் சுயம்புலிங்கம் இருப்பது கண்டனர் ஐயனுர் அவ்விடத்தையே தமக்கு, ஆலயம் அமைக்கத் தெரிவுசெய்து கொண்டுள்ளாரென்று எண்ணிய மக்கள், அவ்விடத்தில் ஒரு சிறிய ஆலயம் அமைத்து ஐயனுரைப் பிரதிஷ்டை செய்துவைத்தனர். காலப்போக்கில் ஆலயம் பெருப்பிக்கப்பட்டு, பெரிய கட்டிடத்துடன் திகழுகிறது.

## அதிசயம்

ஒரு முறைஊழிக்காலமோ என அதிசயிக்கத்தக்கவாறு பெருமழை பெய்து அவ்வூரைக் கடல்குடிகொள்ளுமோ எனுமளவு அச்சம் நிலவியது கடலும் பெருக்கெடுத்துஊர் மனைக்குள் வந்துவிட்டது. இது கண்ட மக்கள் ஐயனுரின் ஆலயமணுகி முறையிட்டு ஆராதனை செய்தனர் சிறிது நேரத்தின் பின் மழையும் குறைந்து கடலும் ஆவேசம் குறைந்து பழைய நிலையடைந்தது. இன்னும் ஒரு முறை இவ்வூரில் அம்மை நோய்வெகு வேகமாகப் பரவிவருவது கண்டு ஐயனுரிடம் முறையிட்டு மூர்த்தியைப் போற்றிப் புகழ் பாடினர் சடுதியாக அந்நோயும் ஊரைவிட்டகன்றது இவ்வாருக நோய் வந்துற்ற போதெல்லாம் ஹரிஹரபுத்திர ஐயனுரின் அனுக்கிரகத்தால் அவற்றை மாற்றிவிடும்வழமைஇவ்வூர் மக்களுக்கு இருந்து வந்துள்ளதாகக் கூறுவர்.

வருடாவருடம் இவ்ஆலயத்தில் முதற்திங்களில் பொங்கலும் ஆடிமாதத்தில் திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெறும் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஐயனுரின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிறது வேட்டைத் திருவிழா இங்கு பிரதானமானதாகும்15 ந்திகதி மாலை வேட்டைத் திருவிழாவின் போது ஐயனுர் புளியந்தீவிலுள்ள நாகதம்பிரான் ஆலயத்துக்கு எழுந்தருளுவார் 16-ந் திகதி ரதோற்சவம் நிகழும் அன்றுமாலை ஆலயத்தின் மேல் திசையில் அதாவது சுயம்புலிங்கம் வந்தடைந்த சமுத்திரக் கரையில் அமைந்துள்ள தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவம் நடைபெறும் மறுதினம் பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

— எஸ். கே. காசிலிங்கம்

...ற்றுதுச்சொல்ல விரும்புகிறேன் அந்த ஸ்தலங்களுக்கும் அவர் சென்று தரிசிக்கவிரும் பக்கூடும். டட்லி பிரதமராக இருக்கையில், வடஇந்திய பௌத்தஸ்தலங்களுக்கு மட்டுமே சென்ருர். அவர் தமிழகத்துக்குச் செல்லாதது பெரியகுறை. இக்குறையை பிரதமர் ஸ்ரீமா தீர்த்துக் கொள்ள இதுநல்ல சமயமாகும். மதுரை மீனுட்சி கோயிலை உலகின் பல பகுதிகளிலிருந்தும் யாத்திரிகர் வந்து பார்த்து வியப்படைகின்றனர். பக்கத்திலுள்ள இலங்கையின் பிரதமர் அதைச் சென்று பார்க்க வேண்டாமா? பாண்டி நாட்டிலே பெண்ணரசியான மீனுட்சி செங்கோல் ஒச்சிய இடமல்லவா அது?

0 0 0

கதிர்காமக் காவடி ஆட்டங்களைப் பற்றி எழுதுகையில் காவடிச் சிந்தைப்பற்றி குறிப்பிட்டேனல்லவா? அந்தக் காவடிச் சிந்துகளை பல நாகசுரக்காரர்களும்வண்ணை சிவன் கோவில் அம்மன் தேர்திருவிழாவில் வெழுத்து வாங்கிவிட்டார்கள். ஆறு நாகசுரக்காரர்களும்சேர்ந்து அதேசத்த இசைத்தமிழை வாசிக்க, தவில்காரர்களும் ஏகோபித்து எழுப்பிய பேரொலி விண்ணகத்துக்கும் கூட கேட்கக்கூடியதாகவும், உணர்ச்சியற்ற மரங்களுக்குக்கூட உணர்ச்சி அளிக்கக் கூடியதாகவுமிருந்தது, இந்த ஒலி கதிர்காமம், கொழும்பு தமிழகம் முதலிய இடங்களிலும் சீக்கிரத்தில் கேட்குமென்றே நம்புகிறேன் வாழ்க நமது நாகசுர இசைக் கலைஞர்கள்!

0 0 0

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம், நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி, என்னையும் அடியனுக்கி இருவினை நீக்கியாண்ட, பன்னிருதடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

## கூட்டுப்பிரார்த்தனை

தாவடி, புதன்

தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் இந்து இளைஞர்களால் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தப்பட்டுவருகிறது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org